தமிழ் வாழ்க!

CONNEMARA PUBLIC LIBRARY
27 FEB 1960

துணர் ௫௫. மலர் ௧௧.

தமிழ்ப் பொழில்

விகாரி - மாசி

1960

கரந்தைத் தமிழ்ச் சங்கம்.

தொண்டு தமிழ் முன்னேற்றம்

கரந்தைத் தமிழ்ச் சங்கம், தஞ்சை.

பொழிற்றொண்டர் :

ச. சுயம்பிரகாசம், B. A., B. L.,

தமிழ்ப் பொழில்.

பதிப்பாசிரியர் குழு.

1. திரு. ச. சுயம்பிரகாசம், B. A., B. L., தலைவர்,
கரந்தைத் தமிழ்ச் சங்கம்; பொழிற்றொண்டர்.

2. திரு. நீ. கந்தசாமி பிள்ளை, பள்ளியகரம், தஞ்சாவூர்.

3. சித்தாந்த கலாநிதி ஔவை. சு. துரைசாமி பிள்ளை,
பேராசிரியர், தியாகராயர் கல்லூரி, மதுரை.

4. வித்துவான், க. வெள்ளைவாரணனார்,
ஆராய்ச்சித்துறை, அண்ணாமலைப் பல்கலைக் கழகம்.

5. திரு. சி. வேதாசலம், B. A., B. L.,
அமைச்சர், கரந்தைத் தமிழ்ச் சங்கம்.

6. திரு. வித்துவான் ச. பாலசுந்தரம்,
கரந்தைப் புலவர் கல்லூரி, தஞ்சை.

உள்ளுறை

துணர் கரு — மலர் கக

		பக்கம்
1.	கையறவு	321
2.	எண், எழுத்து ஆராய்ச்சி வித்துவான், தி. சங்குப்புலவர்	323
3.	மதிப்புரை	326
4.	உலகளந்தான் கோ. சண்முக சுந்தரம், M. A., M. Sc.,	229
5.	குறமும் குறவஞ்சியும் மது. ச. விமலானந்தம், எம். ஏ.,	334
6.	தண்மதியும், தமிழ் மறையும் வித்துவான், வி. சச்சிதானந்தம்	343
7.	கவிதையும் ஒழுக்கமும் ச. அகத்தியலிங்கம், M. A., B. Sc.,	348

27 FEB 1960

தமிழ்ப் பொழில்

தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச் சங்கத் திங்கள் வெளியீடு

துணர்	திருவள்ளுவர் யாண்டு ௧௯௯௧	மலர்
௩௫	விகாரி, மாசி 1960 பிப்ரவரி, மார்ச்	௧௧

கையறவு

சென்ற சில திங்களாகத் தமிழ்ப் புலமை வாய்ந்த தக்காரை யிழந்து வருந்துவது தமிழகத்திற்கு வழக்கமாகப் போயிற்று. இம்முறையும் இருவரிழப்பிற்கு வருந்தும் நிலை நமக்கு வாய்த்துள்ளது. முதற்கண் பேராசிரியர் மு. இராகவையங்காரவர்களைக் குறிப்பிடலாம். ஐயங்காரவர்கள் தமிழ்ப்புலவர் மரபில் தோன்றியவர். தமிழ்ப் பேரறிஞரும், கவிஞருமாய ரா. இராகவையங்காருக்கு நெருங்கிய உறவுமுடையவர். இவர்களிருவரும் உறவு முறையால் நெருக்கமாகவிருந்தது போலவே தமிழ்ப் புலமைத் துறையிலும் அப்புலமையினை உலகவரறிய நூல் வாயிலாகவோ உரைவாயிலாகவோ வெளிப்படுத்திய நெறியிலும் ஒன்றுபட்டு விளங்கினர். தமிழ் மொழியிலமைந்த இலக்கண இலக்கியங்கள், அவைகளைப் பற்றிப் பல உரையாசிரியர்கள் வரைந்த உரைகள், தமிழ்நாட்டுக் கல்வெட்டுக்கள் பட்டயங்கள் முதலிய பல துறைகளில் கற்றுத் துறைபோய வித்தகராகத் திரு. மு. இராகவையங்காரவர்கள் விளங்கினர். அவர் தம் புலமைத்திறத்தால் கண்ட பல முடிவுகளில் வேறுபாடு கொள்வாருண்டு. ஆனால் அவருடைய பல்கலைப் புலமையில் வேறுபாடு யாவருங் கொள்ளார். சென்னைப் பல்கலைக் கழகச்சார்பில் வெளிவந்ததமிழ்ப்பேரகராதியை முயன்று தொகுத்துத் தக்க விளக்கங்களுடன் வெளியிட்ட குழுவிற்கு ஐயங்காரவர்கள் தலைவராகவிருந்து சிறப்புறத் தொண்டாற்றினர். மதுரைத் தமிழ்ச் சங்கச் சார்பில் வெளிவரும் திங்களிதழான செந்தமிழ் வாயிலாக அவர்கள் வரைந்த தமிழ், தமிழ் நாடு தொடர்புடைய கட்டுரைகள் இன்றும் என்றும் ஆய்வாளருக்கு நல்வழி காட்டுந்திறத்தன. சேர மன்னர்கள் பற்றியும் அவர்களுடைய தலைநகர் பற்றியும் ஐயங்காரவர்கள் வரைந்துள்ள நூல்களில் அவருடைய விரிந்த புலமைத் திறத்தைக் காணலாம். இவ்வாறு பல்வகையாலுஞ் சிறந்து விளங்கிய ஐயங்காரவர்களை இழந்தது தமிழ் மொழிக்குப் பேரிழப்பாகுமெனக் கருதுகின்றோம். எம் வருத்தத்தினை ஐயங்காரவர்களின் குடும்பத்தாருக்குத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இரண்டாவதாக நாம் வருந்தப் பிரிந்தவர், தமிழ்த் தவமணி அ. பொன்னண்ணுக் களத்தில் வென்ளுரவர்களாவார். இவர்கள் நம் சங்கந்தோன்றிய காலந்தொடங்கிச் சங்கத் தலைவர்களுடனும், கரந்தைக் கவியரசு. வேங்கடாசலம் பிள்ளையவர்களுடனும், அ. கணபதிப் பிள்ளை யவர்களுடனும், சிவ. தட்சணாமூர்த்தி பிள்ளை யவர்களுடனும் நெருங்கிய தொடர்பும் நண்புமுடையவர். மேற்குறிப் பிட்ட பெருமக்கள் போன்ருரின் உலையா முயற்சியால் உருப்பெற்றதே நம் கரந்தைத் தமிழ்ச் சங்கமாகும். தொடக்கத்தில் சங்கக் கல்வி நிலையத்தில் தமிழாசிரியராகப் பணி புரிந்துள்ளார். புலமைக்கறி குறியாய அடக்கமும் இன்சொலுமுடையவர். நக்கீரர் முருகாற்றுப் படையில் குறித்த துனியில் காட்சி முனிவராக நம் கண்ணெதிரில் விளங்கியவர். செற்றமும் இகலும் சேரா மனத்தினர். கற்ருேரறியா வறிவினர். மாசறத் தோன்றிய மாண்பினர். 'மூத்தோரன்ன வெண்டலைப் புணரியென' சங்ககாலப் புலவர் கூறியது போல வெள்ளிய முடியுடன் விளங்கிய திருவுருவினர்.

இவர்கள் தம் பிற்கால வாழ்வில் பண்டைய முனிவர்கள் மேற்கொண்டொழுகிய இருக்கை முறைகளில் தேர்ந்தவராக விளங்கினர். முதுமையினும் தளராது தமிழ் நாடெங்கணும் சுற்றிக் கல்வி நிலையங்கள், சங்கங்கள் போன்றவற்றில் இருக்கைமுறைகளைச் செய்து காட்டியும் சொற்பொழிவு செய்தும் மக்களுளங்கவர்ந்த பெரியாராவர். இவர்கள் மேற்கொண்ட இருக்கைப் பயிற்சியும் ஒழுங்குற வாழ்ந்த தூயவாழ்வும் இறக்குங்காறும் உடல் நலமோடி ருக்கவுதவியமையை யாவரும் மறியலாம். இறப்பிலும் இன்பங்கண்ட பெரியார்களுள் ஒருவராக இலங்கினர். இவர் வாழ்வு முடிந்தமை எல்லோருக்கும் வியப்பளிக்கவல்லதாகும். ஓரிரு நாட்கள் கூட உடல் நலமின்றி மற்றவர் உதவி நாடிப் படுக்கையில்கிடந்து தொல்லையுருது 'உறங்குவது போலுஞ்சாக்காடு' என்று வள்ளுவர் கூறியது போல இவர்களின் உயிர் பிரிந்தமை பெருவியப்பிற்குரியதாகும். இதற்குக் காரணம் இவர்கள் மேற்கொண்டிருந்த இருக்கைப் பயிற்சியும் ஒழுங்குடன் கூடிய தூய வாழ்வுமாகும். தூயவாழ்வு வீட்டுலகம் கொடுப்பது ஒருபுறமிருந்தாலும், இம்மையில் உடற்பிணி முதலிய தொல்லைகளினின்றும் விலக்கும் என்ற உண்மைக்கு ஒப்பற்ற சான்ருகக் களத்தில் வென்ருரவர்கள் விளங்கினர். தமிழகப் புலவர் குழுவில் உறுப்பினராகவிருந்து இருகூட்டங்களில் கலந்துகொண்டு சிறப்பித்தனர். எல்லோருடைய கூற்றிலும் உண்மைகளிருக்குமென நம்பி, ஆண்டாலும் அறிவாலும் சிறியவர்பாலும் ஒன்றை அறிந்து கொள்ளும் பெருமைக்குணமுடையவர்கள். அடக்கமும் இன்சொலும் அவர்கட்கணிகளாக விளங்கின. அவருக்குப் பகையும் நட்பும் இல்லை. யாதும் ஊர் யாவரும் கேளிர் என்னும் சங்ககாலப் புலவர் மொழிக்கு இலக்காக இவர்களின் வாழ்வு அமைந்திருந்தது. வற்ருது சான்ருேர் மனமெனத் தெளிந்து காலமெல்லாம் ஓடும் கொள்ளிடக் கரையில் இன்னிழலுதவும் எழிலுறு மரங்கள் புடைசூழப் பழமையும்

எண், எழுத்து ஆராய்ச்சி

பண்டித - வித்துவான், சங்குப் புலவர்.

"எண்ணென்ப வேனை யெழுத்தென்ப விவ்விரண்டுங்
கண்ணென்ப வாழு முயிர்க்கு"

என்பது திருக்குறள். "எண்ணெழுத்திகழேல்" "எண்ணும் எழுத்தும் கண்ணெனத்தகும்" என்பன பிற ஆசிரியர் வாய்மொழிகள்.

திருக்குறளுக்கு உரை கண்ட ஆசிரியர் பலர்: அவருட் சிறந்தவர் பரிமேலழகர் என்பது யாவரும் அறிந்ததொன்றே. ஆயினும் "எண்ணென்ப" என்னும் குறட்பாவுக்கு அவர் கூறியது பொருத்தமன்று என்பது என் கருத்து, மணக்குடவரும் காளிங்கரும் கூறியதே நூலாசிரியர் கருத்தாக இருக்கும் என்பது என் கருத்து.

பரிமேலழகர் "எண் என்று சொல்லுவனவும் எழுத்து என்று சொல்லுவனவும் ஆகிய கலைகள்" என்று பொருள் கூறி, "எண் என்பது கணிதம்; அது கருவியுஞ் செய்கையுமென இருவகைப்படும்; அவை ஏரம்பமுதலிய நூல்களுட் காண்க. எழுத்தெனவே அதனோடு ஒற்றுமையுடைய சொல்லும் அடங்கிற்று. இவ்விருதிறமும் அறமுதற் பொருளைக்காண்டற்குக் கருவியாகலின் "கண்' எனப்பட்டன" என விளக்கமும் கூறினர்.

பரிப்பெருமாள் "மேற்பொதுப்படக் கூறிய பலவற்றுள்ளும் இவை இரண்டும் சிறப்புடைத்து என்று கூறிற்று" எனவுரைத்தார்.

பரிதி என்பவர் "எண்ணாகிய சோதிடமும் எழுத்து முதலாகிய அஞ்சு லட்சணமும்" என்று சுருக்கமாகக் கூறினர்.

மணக்குடவர், "எண் என்று சொல்லப்படுபவனவும் எழுத்தென்று சொல்லப்படுவனவும் ஆகிய இவ்விரண்டு பொருள்களையும்" என்று மட்டும் கூறி விடுத்தனர்.

322-ஆம் பக்கத் தொடர்ச்சி.

புதுமையும் ஒன்றிய தமக்கெனவுரிய இருப்பிடமிருந்தும், அவர் அங்குத் தங்குவதில் அமைதிகொள்ளவில்லை. இருக்கைப் பயிற்சியுடன் கூடிய தூயவாழ்வால் மனிதன் பல ஆண்டுகள் பிணியின்றி இன்பமுடன் வாழலாம் என்றவுண்மையைத் தன்னைக் கண்ட அளவில் உணர வைக்க ஒரு நடமாடும் அறநூலாக விளங்கினரெனக் கருதுகின்றோம்.

இவ்வாறு சிறந்த பண்புகளின் வடிவாக விளங்கிய களத்தில் வென்றவர்கள் மறைவுக்கு வருந்துவதோடு அவர் குடும்பத்தாருக்கும் நம் வருத்தத்தை தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

காளிங்கர், "எண் என்றது இருமை இன்பமும் தமது உள்ளத்தால் தெரிந்து பிரித்து எண்ணிக்கொள்வது; எழுத்து என்றது தாம்கற்கும் கல்விக்குத் துணையுறுப்பாகிய எழுத்து என்று ஆயிற்று; மற்று இவ்வாறன்றிக் கணக்கு நிலையாகிய சிற்றெண்ணும் பேரெண்ணும் நிறையெண்ணும் நிலவெண்ணும் பிறவுமாகிய நுண்குறி எண் என்றும், மற்று இவற்றின் அறிகுறி எழுத்தாய் அடிப்படைட் வருகின்ற தொகை விரி எழுத்தும் என்றும் கூறலாம்" என்றனர்.

இவ்வுரையால் பரிமேலழகர் கருத்தும் பரிதி என்பவர் கருத்தும் கணிதநூலும் இலக்கண நூலும் என்பது தெற்றென விளங்குகின்றன. பரிப்பெருமாள் கருத்து இன்னதென விளங்கவில்லை.

மணக்குடவர் கருத்தும், காளிங்கர் கருத்தும் எண் என்பன ஒன்று முதலிய எண்கள் தாம் என்றும், எழுத்து என்பன அகர முதலிய எழுத்துக்கள் தாம் என்றும் ஒருவாறு புலப்படுகின்றன. ஆயினும் விளக்கமாகத் தோன்ற வழியின்று. இனி ஆராய்வோம்.

நூலாசிரியர் "வாழுமுயிர்க்குக் கண்என்ப எனப் பொதுவாகக் கூறியிருப்பதால் எல்லாரும் எளிதாகக் கற்கும் இயல்புடைய வற்றைத்தானே கூறியிருப்பர்! அருமையாகக் கற்றுப் புலமை பெற்று விளங்கும் சிலரையா கூறுவர்? கணித நூல்கள் பலவுள; இலக்கண நூல்கள் பலவுள; இவற்றை யெல்லாங் கற்றவர்தாம் கண்ணுடையவர் எனில் மற்றை மக்களெல்லாம் கண்ணில்லாதவர் என்றன்றோ பொருள்படும்? அங்ஙனம் பொருள்படின் ஆயிரத்தில் ஒருவர் பத்தாயிரத்தில் ஒருவர்தாமே கண்ணுடையவராய் விளங்க இயலும்? எல்லாரும் எளிதிற் கற்றுக் கணிதநூற் புலமையாளராகவும் இலக்கண நூற் புலமையுடையவராகவும் வர இயலுமா? வாழுமுயிர்க்கு என்று கூறிய வள்ளுவர் கருத்துக்கு இது பொருத்தமாமா? எண்ணும் எழுத்தும் அறிந்து எல்லாருங் கண்ணுடையவராக வாழ வேண்டும் என்பது ஆசிரியர் கருத்தாக இருக்கும். கணிதத்திற்கும் இலக்கணத்திற்கும் எண்ணும் எழுத்தும் தாமே கருவியாகும்! ஒன்று முதலிய எண்களை யறியாமற் கணிதநூற் கற்கவியலுமா? அகர முதலிய எழுத்துக்களை யறியாமல் இலக்கணநூல் கற்கவியலுமா? அடிப்படையான கல்வி எண்ணும் எழுத்தும் தாமே! அவற்றைக் கற்றபின்னரன்றோ மற்றக்கலைகளைக் கற்கவேண்டும்! ஒன்று முதலிய எண்களை யறிந்து கூட்டிக் கழித்துப் பெருக்கி வகுக்கு முறை யறிந்தவனே எண் அறிந்தவன் ஆவன். உயிர், மெய், ஆய்தம், ஆகிய எழுத்துக்களையறிந்து அவற்றைச் சேர்த்துக் கூட்டிச் சொல்லாக்கிப்படிக்கத் தெரிந்தவனே எழுத்தறிந்தவனுவன் இவ்விரண்டும் அறிந்தால் அம்மக்கள் கண்ணுடையவர் போல வாழ்க்கை வழியறிந்து சென்று நல்வாழ்வு வாழ்வர் இவ்விரண்டும் அறியார் வாழ்க்கை, குருடன் கோலூன்றிச் செல்வது போலவும் பிறர் கைத்துணையாகச் செல்வது போலவும் இடர்ப்பட்ட வாழ்வா

யியங்குமன்றோ? பிறர் துணையின்றி அவர் வாழ வழியுண்டா? உலகியலில் நாம் கண்டறிந்த உண்மைதானே இது. எண்ணும் எழுத்தும் அறியாதவன் கண்ணில்லாதவன் போலப் பலரிடம் கேட்டு அறிந்துதானே வாழ்க்கை நடத்துகிறான். தானே வாழ்க்கை நடத்துகிறானா? ஓலை வந்தாலும் அதனை வாசிக்க அறியாமற் பிறரிடங் காட்டுகிறான். வாழ்க்கைக்குரிய பொருள்கள் வாங்க வேண்டும் எனினும் அதற்கும் எண் எழுத்து வேண்டுமல்லவா! ஒரு பொருளைக் கொடுத்து மற்றொரு பொருளை வாங்கும் பண்ட மாற்றுக்கும் எண்ணல், எடுத்தல், முகத்தல், நீட்டல் ஆகிய அளவைக் கணக்குகள் தெரிய வேண்டுமல்லவா? ஒரு பொருளை ஒருவருக்கு விற்க வேண்டும் எனினும், அடைவுவைக்க வேண்டுமெனினும் கையெழுத்திட வேண்டுமல்லவா? இவை போன்ற செயல்கள் எல்லாவற்றிற்கும் எண்ணும் எழுத்தும் கருவியன்றோ! ஆய்ந்து பார்க்கின் இருவிழிகள் போல வாழ்வு வழித்துணையாகக் கொள்ளப்படுவன எண்ணும் எழுத்தும் ஆகிய கல்வியே! மக்களாக வாழ்வார்க்கு எல்லாம் கண்ணாக வழிகாட்டி நல்வழியிற் செலுத்துவன எண்ணும் எழுத்துமே இவற்றைக் கற்ற பின்னரே மற்றக் கலைகள் எல்லாம் எளிதிற் கற்கவியலும் இவற்றைக் கல்லாமல் கணிதமும் இலக்கணமும் கற்க வியலுமா? ஆதலால் அடிப்படையாகிய எண்ணினையும் எழுத்தினையுமே கண்கள் எனக்கூறினா ரென்றல் சாலப் பொருத்தமாம். மணக்குடவர் கருத்தும் காளிங்கர் கருத்துமே நாம் கொள்ளத் தகுந்தது. பரிமேலழகர் கருத்தும் பரிதி என்பவர் கருத்தும் இக்குறட்குப் பொருத்தம் அன்றெனத்தள்ளற் பாலதே அறிஞர் ஆய்ந்து உண்மை தெளிக.

செழுந்தமிழ்த் தீஞ்சுவை விரும்பித் தெளிவில் லாமல்
　　தென்னனென நமனாகி இருக்குங் கூற்றே
தொழுந்தகைய பேரறிஞர் தமிழர் கட் கோர்
　　துணையாகி மொழிவளர்த்த தூயோர் தம்மை
எழுந்தருந்தி ஏப்பமிட்டாய் எமனே எங்கள்
　　இயற்றமிழன் பாரதியை சதாசிவத்தை
விழுங்கியவச் சுவடுமறை யாத முன்னர்
　　விரிந்ததமிழ் அறிஞரிரு மொழியும் வல்லார்.

பண்பட்ட பண்டிதர்பன் நூல்வ ரைந்த
　　பாவலர் மு. ராகவையங் காரை உண்டாய்
கண்கெட்ட கூற்றுவனே களத்தில் வென்றார்
　　பொன்னண்ணா எனும்யோகப் புலவர் ஏற்றை
எண்கெட்ட எமனே உன் வயிற்ற டக்க
　　எவ்வாறு துணிந்தாய்நீ அந்தோ அந்தோ
விண்பட்ட அம்மேலோர் இடம்நி ரப்ப
　　வேறெவரிங் குள்ளார்யாம் என்ன செய்வோம்.

‘மறைமலையடிகள் வரலாறு’

ஆசிரியர் : மறை - திருநாவுக்கரசு,
தமிழ்ப் பேராசிரியர், வ. உ. சி. கல்லூரி, தூத்துக்குடி.

வெளியீடு :
சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை - 1.

விலை : 15—00

‘மறைமலையடிகள் வரலாறு’ என்னும் நூல் வரப்பெற்றோம். பல்லாவரம் பொதுநிலைக் கழக ஆசிரியர் மறைமலை அடிகள் என்றால், நம் தமிழ்நாடு மட்டுமின்றி வெளிநாட்டு மக்களும் அறிவார்கள். இந்த நூற்றாண்டில் விளங்கிய பெரும் பேராசிரியராவர். அவர் கல்லாதன உலகில் இல்லாதனவென்று சொல்லும்படிப் பன்மொழி களிலமைந்த் பல கலைகளும் கற்றுத் துறைபோய பொற்புடை அடிக ளாக விளங்கினரென்று கூறின் மிகையாகாது. தமிழ் நாட்டில் தமிழ் மொழியில் தனக்கெனப் புது நடையும் போக்கும் அமைத்துக் கொண்ட பெரியாராவர். தனித் தமிழ் இயக்கத்திற்குத் தம்முடைய உரையாலும் எழுத்தாலும் புத்துயிரூட்டிய முதற்பெரும் பேராசிரியர். தமிழ் தனித்தியங்கும் உயர்தனிச் செம்மொழி யென்பதை செயலில் தாமரிதின் முயன்று கண்ட அரசியல், வாழ்வியல், சமயவியல் போன்ற துறைகள்தோறும் நூற்கள் வரைந்துதவிய பெருமகனுவார். தமிழின் மறுமலர்ச்சிக்கு வித்திட்டவர் இவரேயாகும். நாவல் எழுதுதல், கட்டுரை வரைதல், விளக்கவுரை வரைதல், மறுப்புரை வழங்கல், பெருநூற்களெழுதுதல், கருத்துநலஞ் சிறந்த பாக்களியற் றுதல் போன்ற துறைகளிலெல்லாம், நிழலில் நீளிடைத் தனிமரம் போல நின்ற பெரியாராவர். இத்தகைய பெருமைக்கும் புகழுக்குமுரிய அடிகளின் வரலாறென்றால் அது தமிழ் மொழி வரலாறு அல்லது தமிழ்நாட்டு வரலாறு என்றுதான் கூறமுடியும். அவ்வரலாற்றையும் அவர்களுடைய அருமைத் திருமகனார் வரைந்துள்ளாரெனின் அந் நூல் பல்லாற்றானுஞ் சிறந்து பொலிதலில் வியப்பில்லை.

அடிகளின் இளமைக்கால முதற்கொண்டு மறையுங்காறும் நிகழ்ந்த பல்வேறு நிகழ்ச்சிகள் நன்கு இடம்பெற்றுள்ளன. நடமாடும் பல்கலைக் கழகமாகிய அடிகளின் நிற்றலிருத்தல் கிடத்தலாய இயக் கங்கள் யாவும் தமிழை அடிப்படையாகக் கொண்டதென்று கூறலாம். அடிகளின் வாழ்வில் அடுத்த இடம் பெறுவது சமயமாகும். சிவத் தொடர்பான சைவ சமயத்தில் பன்னெடுங் காலமாகத் தோய்ந்த புலமையும் தெளிவும் அடிகட்குண்டு. இவ்வரலாற்றில் இச் சைவ சமயத் தொடர்பான அடிகளின் உரையும் எழுத்தும் பொலிதலைக் காணலாம். அடிகள் ஒரு அரசியல்காரரல்லர். ஆனால் தமிழ்நாட்டு அரசியலைப்பற்றித் தம்முடைய கருத்துக்களை நன்கெடுத்துக் கூறியே வந்துள்ளார். தமிழ்ச் சமுதாயத்தில் காணப்படும் மேல் கீழ் வேற்றுமைகளைக் களைந்தெறியவேண்டுமென்னும் உரங்கொண்டவர். இவைகளொடு தொடர்பான நிகழ்ச்சிகளும் செய்திகளும் ஆங்காங்கு விளக்கப்படுகின்றன.

இந்நூல் தமிழ் வரலாறும் சமய வரலாறும் முற்ற அறியும் அவா வுடையார் ஒவ்வொருவரும் படித்தறியவேண்டிய நூலாகும். அடிக ளின் வரலாற்றை அரிய பெரிய நூலாக ஆக்கியுதவிய அடிகளின் மகனார், திரு. மறை - திருநாவுக்கரசுவுக்கு தமிழுலகம் நன்றி செலுத்தும் கடப்பாடுடையதாகும். இதனை அழகுற வெளியிட்ட சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தாருக்கும் தமிழுலகம் நன்றி செலுத்தும் கடப்பாடுடையதாகும்.

Two Thousand Years of Tamil Literature.

By

J. M. Somasundaram Pillai, B. A., B. L.

வெளியீடு : [பக்கம் 378—படம் 8.

சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை - 1.

விலை ரூ. 8—25

"இரண்டாயிரம் ஆண்டுகளாகத் தமிழ் இலக்கியம்" என்னும் பெயருடன் வெளிவந்துள்ள பூந்துணர், தமிழ் மொழி உணர்ந் தார்க்கும், அஃதின்றி ஆங்கிலமே உணர்ந்தார்க்கும் தமிழ் இலக்கி யத்தில் இரண்டாயிரம் ஆண்டுகளாகத் தோன்றியுள்ள அரிய இலக்கியங்களைத் துய்த்துப் பயனடைதற் கேற்ற கருவூலமாகும். இதனில் சங்ககாலச் சான்றோர் முதல் இராமலிங்க அடிகள் வரை உள்ள புலவர் பெருமக்களும், சமயத் துறையில் வல்ல பெருமக்களும் இயற்றியுள்ள இலக்கியப் பரப்பின் இனிய பகுதிகளை இதனுள் காணலாம்.

"யாதுமூரே" எனத் தொடங்கும் புறப்பாட்டுள் அமைந்துள்ள ஞானிகள் இயல்பு கூறி, ஞானிகளால் காணப்பெற்ற இறைவன் நிலைமை "அன்புருவாம் பரசிவமே" என்னும் அருட்பா பகுதி யோடு முடிவது, தமிழ் மக்களின் இயற்கைக்குப் பெரிதும் பொருத்த மாக இருக்கின்றது. தமிழ்ச் செய்யுட்களும், அவற்றின் ஆங்கில மொழிபெயர்ப்புக்களும் ஆராய்ச்சிக் குறிப்புகளும், அறிமுக வுரைக ளும் இந்நூலுள் அமைந்து சிறப்புச் செய்கின்றன.

இதனுள் காணப்பெறும் ஆங்கில மொழிபெயர்ப்புக்கள்; போப்பையர், சுந்தரம் பிள்ளை, கனகசபைப் பிள்ளை, நல்லசாமிப் பிள்ளை ஆகிய பேரறிஞர்களால் இந்நூற்றாண்டின் முற்பகுதியிலும், சென்ற நூற்றாண்டின் பிற்பகுதியிலும் எழுதி வெளியிடப்பெற்றவை. இம்மொழிபெயர்ப்புக்கள் வெளிவந்த திங்கள் தாள்கள் எல்லாம் மறைந்துவிட்ட இக்காலத்தில் அவற்றைத் திரட்டி ஒருசேர ஓரிடத் தில் தருவது அரிய முயற்சியாம். பரந்த உலகத்துக்குப் பெரிதும் பயன்படுவதுமாகும்.

இந்நூலை இலண்டன் பல்கலைக் கழகப் பேராசிரியர் ஒருவர் "இஃதோரரிய விருந்து. ஒரே மூச்சில் நூல் முழுவதும் சென்றேன்" என்றும், மொழிநூற் புலவரும், மேலை வங்காள மேல் சட்டசபைத் தலைவரும் ஆய அறிஞர் சட்டர்ஜி அவர்கள் "இஃதோர் நல்ல

தொகுப்பு, இத்தகைய தொகுப்பு இன்னும் பல வேண்டும் என நம்மை விரும்பச் செய்கிறது" என்றும் இருவரும் உளமாரப் புகழ்வதிலிருந்தே இப்பரந்த உலகம் இதனை எவ்வாறு ஏற்றுக்கொள்கிறதென்பதனை நாம் அறியலாம்.

இவ்வரிய விருந்தை நமக்களித்தவர், தமிழ் மொழிக்கும், சைவத்திற்கும் நீண்டகாலமாகத் தொண்டாற்றிவரும் நற்குடிப் பிறப்பும், தமிழ், ஆங்கிலம், நுண்கலை முதலியவற்றின் புலமையும் வாய்ந்த திருவாளர், J. M. சோமசுந்தரம் பிள்ளை அவர்கள். அவர்களைத் தமிழ் உலகம் நன்கறியும். தஞ்சைப் பெரியகோயில், சோழர் கோயிற் பணிகள், திருவரங்கம், திருச்செந்தூர் என்ற பல நூல்களாலும், ஆராய்ச்சிக் கட்டுரைகளாலும் தமிழகத்தில் அறிவு வளர்ச்சியை மேம்படச் செய்து வருபவர் ஆவார்கள். இப்போழ்து அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் நூல் வெளியீட்டுப் பகுதியில் தலைவராகச் சிறந்த தொண்டாற்றி வருகிறார்கள். இன்னும் பல நூல்கள் இவர்களால் வெளிவரும்வண்ணம் எல்லா நலனும் இவர்கட்குத் தந்தருளுமாறு தமிழ் அன்னையை வணங்குகின்றோம்.

'நவமணிகள்'

ஆசிரியர்: **T. S. வைத்தியநாதன்.**

திருவாவடுதுறை ஆதீன வெளியீடு.

நவமணிகள் என்னும் நூல் திருவாவடுதுறை ஆதீனத்தின் நூற்றியிருபத்தெட்டாவது வெளியீடாக வந்துள்ளது. இந்நூலை ஆக்கியவர் T. S. வைத்தியநாதன் என்போராவர். இந்நூல் முந்நூற்று நான்கு பக்கங்களை உடையது. நல்ல கடிதத்தில் நல்ல எழுத்தில் அச்சிடப்பட்டுள்ளது. நூலாசிரியர் தமிழ் வடமொழி ஆங்கிலம் என்னும் இவற்றிலுள்ள நூல்களைக் கொண்டும், கல்வெட்டுக்களைக் கொண்டும் ஆராய்ந்து நவமணிகளைப் பற்றிய செய்திகளை இந்நூலில் தந்துள்ளார். இவர்கள் ஆராய்வு மிகவும் போற்றற்குரியது. இருப்பினும் சில இடங்கள் ஆராய்தற்குரியன. எடுத்துக்காட்டாக ஓர் இடத்தைக் கூறுகின்றேன். பக்கம் 39-ல் 'வைரத்தின் வகைகள்' என்னும் தலைப்பில் "சோழர் காலத்துக் கல்வெட்டுகள் பலவற்றில் மணிகளைப்பற்றிய செய்தி கிடைக்கின்றன. மட்டதாரை, மட்டதாரைச் சவக்கம், மட்டதாரைச் சப்படி என்பவை வைரத்தின் வகைகளாக அவற்றில் காணப்படுகின்றன" என்று கூறியுள்ளார். தஞ்சைப் பெரியகோவில் கல்வெட்டுகளில் குந்தவையார் ஷி கோவிலுக்கு அணிகலன் கொடுத்ததைப்பற்றிக் கூறுவது ஒன்றுகும். அக்கல்வெட்டுகள் வைரம் தூயன என்றும் மட்டம் என்றும் பிரிக்கப்பட்டு அம்மட்டந்தான் மட்டதாரை, மட்டதாரைச் சவக்கம், மட்டதாரைச் சப்படி என்று பிரிக்கப்பட்டுள்ளது. இதுபோன்ற செய்திகளை ஆராய்ச்சிப் பிரியர் ஆராய்ந்து பார்ப்பாராக.

குறிப்பு:- மதிப்புரை வேண்டுவோர் இரு படிகள் அனுப்புதல் வேண்டும்.

"உலகளந்தான்"

கோ. சண்முகசுந்தரம், M.A., M.Sc.,
'அன்பு இல்லம்', 1993, சேர்வைகாரர்தெரு, கரந்தை.

அரசியலும் புள்ளி விவரங்களும் :

தனித் தனியே வாழ்ந்த மனிதன் காலப்போக்கில் கூடி வாழ்வதில் உள்ள நன்மையை உணர்ந்தான். இதன் விளைவாக மனிதன் சமூக வாழ்க்கையை மேற்கொண்டான். குடும்பம், குழு, சிற்றூர், நாடு ஆகிய அமைப்புகள் மனிதனின் சமூக வாழ்க்கைக்கு அரண் செய்தன. தனி மனிதன் நாடு எனும் தொகுதியில் உறுப்பினனாக அடங்கியபோது, அவனது நல்வாழ்வுக்கு வழி அமைப்பதும், உரிமைகளைப் பேணுவதும், உடைமைகளுக்குக் காப்பு அளிப்பதும் நாட்டின் கடமைகளாகி விட்டன. இத்தகைய கடமைகளை நிறைவேற்றுவதற்கு அரசு எனும் தலைமைக்குள் ஆட்சி இடம் பெற்றது.

நாட்டுக்கு நாடு ஆட்சி முறைகளில் வேறுபாடுகள் பல இருந்தன. ஆட்சி முறைகள் பலதிறப்பட்டனவாயினும், இவை எல்லாவற்றிற்கும் அடிப்படையான குறிக்கோள் தம் ஆட்சிக்குள் அடங்கும் மக்களது நல்வாழ்வே. ஒவ்வொரு நாடும் தமது மக்களின் வாழ்க்கையின் பல துறைகளையும் ஆய்ந்தறிந்து அவர்களது வளர்ச்சிக்கான திட்டங்களை வகுக்கவேண்டியிருந்தது. இயற்றல், ஈட்டல், காத்தல், வகுத்தல் ஆகிய பணிகளைச் சிறப்பாக நிறைவேற்றவல்ல அரசாக விளங்குவதற்கு நாட்டு மக்களைப் பற்றியும் நாட்டின் நிலவளம், இயற்கைச் செல்வம், கால்நடை ஆகியவற்றைப் பற்றியும் நுணுக்கமாகப் புள்ளி விவரங்களைத் தொகுத்தல் இன்றியமையாததாகும். மக்கள் தொகை, அவர்களது தொழில், அவர்களது நிலம், வீடு முதலிய உடைமைகள் அவர்களது குடும்பநிலை, அவர்களது பொருளாதாரநிலை, கல்விநிலை, இவைபோன்ற பலதுறையான உண்மைகளைத் தொகுத்து ஆராய்ந்தாலொழிய ஆட்சி சிறக்க வழி காணமுடியாது. இந்த உண்மையை உணர்ந்த அரசுகள், அரசியல் புள்ளி விவரங்களைத் தொகுப்பதில் பண்டைக்காலத்திலிருந்தே ஈடுபட்டு வந்திருக்கின்றன.

இந்தியாவில் அரசியல் புள்ளி விவரங்கள் :

அரசியல் புள்ளி விவரங்களின் தொன்மைக்கு உலகின் பல நாடுகளிலும் சான்றுகள் கிடைத்துள்ளன. கி. மு. 3050 இல்

எகிப்திலும், கி.மு. 1020 இல் சீன நாட்டிலும் புள்ளி விவரங்கள் தொகுக்கப்பட்டமைக்குச் சான்றுகள் கிட்டியுள்ளன. ஏசுகிறித்து பிறந்த காலத்தில் ஒரு மக்கட்கணிப்பு நடைபெற்றதாக விவிலிய நூல் கூறுகிறது. மகாபாரதத்திலும்[1], சாதகக் கதைகளிலும் நாட்டின் போர்ப்படை, விளையுள் ஆகியவற்றைக் குறித்த சில புள்ளி விவரங்களைக் காண்கிறோம்.

இந்தியாவின் வரலாற்று நூல்களிலும், அரசியல் நூல்களிலும் காணக்கிடக்கும் சில குறிப்புகள் இந்தியாவில் அரசியல் புள்ளி விவரங்கள் பண்டைக்காலத்திலிருந்தே நுணுக்கமாகத் தொகுக்கப்பட்டமையை உணர்த்துகின்றன. கிரேக்க நாட்டிலிருந்து இந்தியாவுக்கு வந்து சென்ற ஆரியன்[2], மெகட்சுதனிசு[3] என்போரது நூல்களிலும் குறிப்புகளிலும் நாட்டின் ஆட்சிக்கு இன்றியமையாத புள்ளி விவரங்கள் சில தொகுக்கப்பட்ட செய்தியை அறிகிறோம்.

சுக்கிர நீதி, அருத்த சாத்திரம் ஆகிய அரசியல் நூல்களிலும் அரசியல் புள்ளி விவரங்களைத் தொகுக்கும் அலுவலர்களது பெயர்கள் காணப்படுகின்றன. சுக்கிர நீதியில்[4] புன் முதலிய அசையாப் பொருள்களையும், அசையும் பொருள்களையும் குறித்த புள்ளி விவரங்களைச் சுமந்திரன் என்னும் பணியாளரும், நகரம், சிற்றூர், காடு, சுரங்கம், விளைநிலம், பிறநிலம் ஆகியவற்றைக் குறித்த புள்ளி விவரங்களை அமாத்தியன் எனும் பணியாளரும், அரசுக்காகத் தொகுத்தல் வேண்டும் எனக் கூறப்படுகிறது. அருத்த சாத்திரத்திலும்[5] மக்களைப் பற்றியும், இருகாலுயிர், நாற்காலுயிர் பற்றியும், வருவாய் பற்றியும், நிலவளம் பற்றியும் பலதரப்பட்ட புள்ளி விவரங்கள் தொகுக்கவேண்டியது அரசுக்கு இன்றியமையாதது என்பதும் புள்ளி விவரங்கள் தொகுப்பதற்குக் கோபன் எனும் பணியாளர் பெயரும் குறிப்பிடப்பட்டிருக்கின்றன.

இவையன்றிப் பல அரசுகளின் காலத்தே எழுதப்பட்ட வரலாற்று நூல்களிலும், அரசியல் நூல்களிலும், பிறநாட்டிலிருந்து இந்தியாவுக்கு வந்தவரது செலவுக் குறிப்புகளிலும் அரசியல் புள்ளி விவரங்கள் குறித்த சான்றுகள் உள்ளன.

---

1. அத்தியாயம் 56-57, சாந்திபருவம்.
2. ஆரியன்—மாவீரன் அலெக்சாந்தருடன் இந்தியாவுக்கு வந்தவன்.
3. மெகட்சுதனிசு—இந்தியாவிற்கு கிரேக்கத்தின் தூதனாக வந்தவன்.
4. சுக்கிர நீதி—அத். 2.
5. அருத்த சாத்திரம்—அத்-2, அத்-27, அத்-56.

தமிழ் நாட்டில் அரசியல் புள்ளி விவரங்கள் :

அரசியல் புள்ளி விவரங்களைத் தொகுத்தல் அரசினரது பொறுப்புகளில் ஒன்றாதலால் தமிழ்நாட்டிலும் அரசியல் புள்ளி விவரங்கள் நெடுங்காலமாகவே தொகுக்கப்பட்டு வந்திருக்க வேண்டும். "நாட்டைக் கூறுபட அளப்பதற்கு நாடளப்போர் என்றும், நாட்டையளந்ததைக் கண்காணித்து உண்மை காண்பதற்கு நாடுகாண் காட்சி என்றும், கூறுபட அளந்த நாட்டிற்கு வரி விதித்தற்கு நாடுகூறு என்றும், நாட்டைக் காவல் காத்தற்கு நாடுகாவல் என்றும், பல அரசியல் அலுவலாளர் இருந்தனர்", என்ற செய்தியை ஆராய்ச்சி வல்லுனர் திரு. தேவநேயப் பாவாணர் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள்[6].

காலஞ்சென்ற ஆராய்ச்சி அறிஞர் திரு. சதாசிவப் பண்டாரத்தார் தமது 'பிற்காலச்சோழர் சரித்திரம்' எனும் நூலில் நிலக்கணிப்பு பற்றிய அரிய செய்தி ஒன்றைச் சுட்டிக் காட்டியுள்ளார்கள்[7]. முதல் இராசராச சோழன் தன் ஆட்சியின் 16-ஆம் ஆண்டாகிய கி. பி. 1001-இல் சோழ இராச்சியம் முழுவதையும் அளக்குமாறு ஆணையிட்டதாகக் கல்வெட்டுகள் தெரிவிக்கின்றன.

முதல் இராசராசசோழன் தன் ஆட்சியின் முற்பகுதியில்,

"திருமகள்போல பெருநிலச் செல்வியுந்
தனக்கேயுரிமை பூண்டமை மனக்கொளக்
காந்தளூர்ச் சாலைக் கலமறுத் தருளி
வேங்கை நாடுங் கங்க பாடியுந்
தடிகை பாடியும் நுளம்ப பாடியும்
குடமலை நாடுங் கொல்லமும் கலிங்கமும்
முரட்டொழிற் சிங்களர் ஈழ மண்டலமும்
இரட்ட பாடி யேழரை யிலக்கமும்
மூந்நீர்ப் பழந்தீவு பன்னீ ராயிரமுந்
திண்டிறல் வென்றித் தண்டால் கொண்ட..."

போர் நிகழ்ச்சிகளில் ஈடுபட்டிருந்தான். பல நாட்டினரையும் தனது திறலால் வென்றபின், இராசராசன் தனது நாட்டின் ஆட்சி முறையினைச் செம்மைப் படுத்துவதில் முனைந்தான். தனது ஆட்சிக்குட்பட்ட நாடுகள் எல்லாவற்றையும் அளந்து, நிலங்களின்

6. பழந்தமிழாராய்ச்சி—ஞா. தேவநேயர், பக்கம்–35,
7. பிற்காலச்சோழர் சரித்திரம்—பகுதி-I, பக்கம்–129.
8. S. I. I., Vol. VII, Nos. 222 and 223.

பரப்பையும் அவற்றில் நன்செய், புன்செய்கள், காடுகள் எவ்வளவு உள்ளன என்பதையும் அவற்றுள் விளைநிலங்கள் எத்துணைப் பரப்புடையன என்பதையும் பற்றிய புள்ளி விவரங்களைத் தொகுக்க முற்பட்டான். போர்க்காலத்தில் தனக்குத் துணை நின்ற சேனாதிபதிகளில் ஒருவனை இந்தப் பணிக்குத் தலைமையாக்கினான். இந்தப்பணி இரண்டு ஆண்டுகளில் நிறைவு பெற்றது. இராச்சிய முழுவதையும் அளந்த காரணம் பற்றித் தனது சேனாபதிக்கு 'உலகளந்தான்'[9] எனும் பட்டத்தைத் தந்து இராசராசன் சிறப்பித்தான். இந்தசேனாதிபதியின் முழுப்பெயர் சேனாபதி குரவன் உலகளந்தானான இராசராச மாராயன் எனக் கல்வெட்டுக்களில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இராசராசன் காலத்தில் உலகளந்தமைக்கு இரு காரணங்கள் உண்டு. நிலவரியினை ஒழுங்குபடுத்திக் குடிகளிடமிருந்து இறை வாங்குவதற்கு நிலக்கணிப்பு பெரிதும் உதவும். அத்தோடு சோழ இராச்சியத்தின் வளர்ச்சியினையும் புதிய பகுதிகளையும் கருதி இராசராசன் தனது இராச்சியத்தைப் பல மண்டலங்களாகவும் ஒவ்வொரு மண்டலத்தையும் பல வளநாடுகளாகவும் பிரித்து அமைத்தான். அதற்கு முன்னர் ஒவ்வொரு மண்டலமும் பல நாடுகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது. சில நாடுகளைத் தன்னகத்துக் கொண்ட வளநாடு எனும் உட்பிரிவு அக்காலத்தில் இல்லை. வளர்ந்துவிட்ட சோழ இராச்சியத்தில் தனது செங்கோன்மை தளராது நிலைக்கவே இந்தப் புதிய ஏற்பாட்டினை இராசராசன் மேற்கொண்டான். இம்முயற்சியில் அவன் தொகுத்த நிலக் கணிப்புப் புள்ளி விவரங்கள் பெருந்துணையாய் அமைந்தன.

முதல் இராசராசனது பேரன் முதல் இராசாதிராச சோழனுடைய குருதேவரது பெயர் அதிகாரிகள் பாராசிரியன் வாசுதேவ நாராயணனாகிய உலகளந்த சோழ பிரம்மாராயர் எனக்கல்வெட்டுகள் குறிப்பதால், இராசாதிராசன் ஆட்சிக்காலத்திலும் (கி. பி. 1018–கி பி. 1054) நிலக்கணிப்பு ஒன்று நடைபெற்றிருத்தல் வேண்டும்.

முதற்குலோத்துங்க சோழனது ஆட்சிக்காலத்திலும் நிலக் கணிப்பு நடைபெற்றிருக்கிறது. கி. பி. 1070–ஆம் ஆண்டில் அதிராசேந்திர சோழன் மகவின்றி இறக்க சோழ நாட்டில் அமைதி குன்றிக் குழப்பம் மிகுந்தது. இத்தகைய சூழ்நிலையில், தந்தை வழியில் கீழைச் சாளுக்கியர் மரபையும், தாய் வழியில் சோழர் மரபையும் சேர்ந்த குலோத்துங்கன் சோழநாது தாயமெய்தி நாட்டின் அமைதியை நிலைநாட்ட முற்பட்டான். முதலில் நாட்டில் குழப்பத்தை அடக்குவதிலும், பின்னர் மேலைச்சாளுக்

9. உலகு எனும் சொல் நாடு என்ற பொருளிலும் வழங்கும்.

கியர், பாண்டியர், சேரர், கலிங்கர் ஆகியோருடன் போர்ச் செயல்களிலும் ஈடுபட்டிருந்த குலோத்துங்கன், தன் ஆட்சியின் பதினாறும் ஆண்டாகிய கி.பி. 1086-ஆம் ஆண்டில்[10] தனது நாட்டினை அளந்து நிலவரியில் சில மாற்றங்களைச் செய்தான். இந்த நிலக்கணிப்பு உலகளந்த சோழப் பல்லவரையன் திருவரங்க தேவன் ஆகிய அதிகாரிகளது பொறுப்பில் இரு ஆண்டுகளில் நிறைவெய்தியது.

மீண்டும் ஒரு முறை, மூன்றாங் குலோத்துங்கனது ஆட்சிக் காலத்தில், கி.பி. 1216-ஆம் ஆண்டு நிலக்கணிப்பு நடைபெற்றிருக்கிறது.

இதுவரை, பிற்காலச் சோழரது காலத்தில் நான்கு முறைகள் உலகளந்த செய்தியைக் கண்டோம்[11]. நிலக்கணிப்புப் போன்றே மக்கட் கணிப்பும் நாட்டின் அரசியலுக்கு இன்றியமையாத புள்ளி விவரங்களாகும். எனினும் தமிழகத்து வரலாற்றுக் குறிப்புகள் மக்கட் கணிப்பு குறித்துத் தெளிவாக அமையவில்லை. இது குறித்து இக்கட்டுரை ஆசிரியர், திரு. பண்டாரத்தாரவர்களோடு கடிதத்தொடர்பு கொண்டபொழுது, திரு. பண்டாரத்தாரவர்கள் பின் வரும் கருத்தினைத் தெரிவித்தார்கள். "...தமிழகத்தில் மக்கள் கணிப்பு நிகழ்ந்தமைக்கு இலக்கியங்களிலாதல் கல்வெட்டுக்களிலாதல் சான்றுகள் காணப்படவில்லை. தமிழ் நாட்டில் விளை நிலங்கள் அளந்து கணக்கெடுக்கப் பெற்றிருப்பதோடு அவற்றை அனுபவிப்போரின் கணக்கும் ஊர் தோறும் எடுக்கப்பட்டுள்ளன. இதனை நோக்குமிடத்து மக்கள் கணிப்பும் நிகழ்ந்திருத்தல் வேண்டும் என்று கருத இடம் உளது. ஆனால் ஆதாரங்கள் இதுகாறும் கிடைக்காமையால் தெளிவாக அறியமுடியவில்லை..."

தமிழ் நாட்டுச் சரித்திரத்தினை மேலும் தெளிவாக்கவல்ல கல்வெட்டுகளும் சான்றுகளும் இன்னும் பல வெளியாகாது உள்ளன. தமிழாராய்ச்சி அறிஞர்களுக்கு இவை கிடைக்கும் பொழுது இது போன்ற இன்னும் பல அரிய செய்திகள் பற்றி விளக்கம் கிடைக்கும் என்பது உறுதி.

---

10. இங்கிலாந்தை வெற்றிகண்ட நார்மானியநாட்டு வில்லியம் எனும் அரசன், உள்நாட்டுக் குழப்பங்களை அடக்கிய பின்னர், நாட்டின் நில அமைப்பை வரையறுக்கக்கருதி, இதே ஆண்டில் (கி. பி. 1086) நாட்டின் சிலபகுதிகளில் நிலக்கணிப்புத் துவங்கி, இரு ஆண்டுகளில் நிலக்கணிப்புப் பேரேடு (Domesdey Book) வரைந்து முடித்தான்.

11. சோழரது ஆட்சிக்காலத்தில் நிலத்தை அளக்கப் பயன்பட்ட அளவைக் கோலுக்கு "உலகளந்த கோல்" என்று பெயர். இது பதினாறுசாண் நீளமுள்ளது.

சிற்றிலக்கியம்: 3.

குறமும் குறவஞ்சியும்.

மது ச. விமலானந்தம், எம்.ஏ.,
தமிழ் விரிவுரையாளர், சரபோசி அரசர் கல்லூரி, தஞ்சாவூர்.

படைப்பாற்றலை — தோற்றுவிக்கும் திறத்தை இரண்டாகப் பிரிக்கலாம். ஒன்று: இயற்கையும் உலகும் இதயத்தில் எழச்செய்யும் எண்ணத்தை உணர்ச்சி தோன்ற, கற்பனைத்திறம் அமையக் கலைஞன் தானே சொந்தமாகப் படைப்பது; இன்னொன்று உலகில் வழங்கும், நடைமுறையில் பயிலப்பட்டு வரும் செய்தி, கதை, நிகழ்ச்சி போன்றவற்றிற்குக் கற்பனை நயம் அமைய இலக்கிய வடிவுகொடுத்து உயரிய ஒன்ருய் ஒளிரச்செய்வது. இன்னணம் உள்ள ஒன்றை உயரிய ஒன்ருய் ஆக்கும் திறத்திற்கு ஞாலம் போற்றும் நாடகக் கலைஞன் ஷேக்ஸ்பியர் ஓர் எடுத்துக்காட்டாக அமைவார். அவர் படைத்த அரிய நாடகங்கள் பெரும்பாலும் அவர் தம் சொந்த கற்பனையில் முகிழ்த்தவையல்ல. Holinshed's Chronicles of England, Scotland and Ireland; Boccaccio's Decamerone; Spenser's Faerie Queene; The Hundred Tales of the Italian Writer Giraldi Cinthio; வரலாறு போன்றவற்றைக் கூட்டிக் குழைத்து; இணைத்துப் பிணைத்து இணையற்ற நாடகங்களாகப் படைத்திட்டார். இங்ஙனம் மண்ணைப் பொன்னுக்குவதும் சிறந்த படைப்பே; தானே சொந்தமாகப் படைப்பதைப் போன்ற பெருமையும் பெற்றியும் உடையதே என்று உறுதியாகக் கூறலாம்.

இத்தகைய படைப்பாற்றல் முத்தமிழ் நலம் துலங்கும் சிற்றிலக்கியங்களிலும் அமையக் காண்கிரேம். உள்ள எளிய ஒன்றை உயரிய இனிய ஒன்ருய் ஆக்கிப் படைக்கும் ஆற்றலுக்குக் குறவஞ்சியையும், பள்ளுப் பிரபந்தத்தையும் குறிப்பிடலாம். கரவற்ற நெஞ்சமும் கவலையற்ற உள்ளமும் படைத்த குறவன் குறத்தியர், பள்ளன் பள்ளத்தியர் தாம் தாம் செயல்படும் போதும், மகிழ்ந்த ஞான்றும், பொருள் நாடி நம்மைத் தேடி வரும்போதும் ஆடிப்பாடி அகமகிழ்வதையும்—நம்மை அகமகிழச் செய்வதையும் காண்கிரேம். அன்னவர்தம் ஆடலும் பாடலும் அனைவருள்ளத்தையும் அள்ளும் திறத்தன; உயர்ந்தோர் தாழ்ந்தோர், சான்ருேர் சிறந்தோர், பண்டிதர் பாமரர், புலவர் புல்லர் எல்லோரையும் ஈர்த்து இன்பமூட்டும் தன்மையன.

இரவலரும் புரவலரும், பாவலரும் காவலரும் கண்டு கேட்டுக் களித்தனர். மகிழ்ச்சிக்கறிகுறியாகப் புவிமன்னரும் கவிமன்னரும் மனமுவந்து அவர்களை ஏற்றிப் போற்றினர். தத்தமக்கு இயைந்த அளவிலே. கலைமலிந்த குறவரும் குறத்தியரும், பள்ளரும் பள்ளத்தியரும் வாழ்ந்தால்தான் அன்னவர்பால் திகழும் கலையும் நிலைக்கும்.

நிலைத்த இன்பம் தரும் என்றுணர்ந்து செல்வரும் சொல்லின் செல்வரும் பாராட்டிவந்தனர்.

பாராளும் மன்னர்கள் பொருள் தந்து போற்றினர், சொல்லாளும் வேந்தர்கள் என்செய்ய இயலும்? இதயம் குளிர்ந்தால் இன்சொல் அருளுவர்; இனிய கவி தீட்டுவர். நிலையில்லாச் செல்வத்தால் கலையை நிலைபெறச் செய்ய இயலுங்கொல்? கால வெள்ளம் கலையைக் கவர்ந்து செல்லவும் கூடுமன்றோ? நிலைத்த செல்வம்—நெஞ்சில் என்றும் நின்று நிலவும் கவிச்செல்வம் படைத்த கவிஞர்கள் காலத்தை வெல்லும் திறமுடைய தங்கள் பாடல்களால் அவ்வரிய ஆடலையும் பாடலையும் நிலையுறச் செய்ய விழைந்தனர் போலும்? அக்கலைஞர்க்கு நன்றி செலுத்த விழைந்தனர் போலும்! அன்றியும் தாம் பெற்ற இன்பம் இவ்வருங்கால வையகமும் பெற்றுப் பெருமகிழ்வு எய்தட்டுமே என்று எண்ணிக் குறவன் குறத்தியர், பள்ளன் பள்ளத்தியர் இவர்களிடையே நிலவி வந்த இவ் ஆடல் பாடல்களைக் கற்பனை நயமும், கவிதைத் திறமும் தோன்றுமாறுன் இலக்கிய ஒளியூட்டிச் சிற்றிலக்கியமாகச் சிறக்கச் செய்தனர் எனலாம்.

ஏட்டில் இல்லா இவ்வினத்தவர் தம் திறத்தை ஏட்டில் தீட்டி, வடிவும் வரம்பும் இல்லா இவர்தம் பாடற்றிறத்தையும் ஆடல் அழகையும் வடிவு தந்து சிற்றிலக்கியமாகத் தீட்டிய இலக்கியக் கலைஞர் தம் இனியதொண்டு என்றும் எண்ணி இன்புறத்தக்கது.

இங்ஙனம் பாவலர் தம் பாராட்டனுபவத்தின் பயனாக, செய்நன்றிக்குச் சிறந்த சான்றாக, பெற்ற இன்பத்தைப் பிறரும் பெறச்செய்யும் புலவர்தம் பெருமித நோக்கின் பிரதிபலிப்பாக விளங்குவனவே இன்று நாம் காணும் குறவஞ்சியும், பள்ளுப் பிரபந்தமும்.

குறவன் குறத்தியரிடையே குலவிய கலை குறவஞ்சியாக மிளிர்ந்தது; பள்ளன் பள்ளத்தியரிடையே நிலவிய கலை பள்ளாக முகிழ்ந்தது. பள்ளாகவும் குறவஞ்சியாகவும் பரிணமிக்கச் செய்த திறம் செந்தமிழ்ப் புலவர்க்கே உரியது.

ஒன்று குறிஞ்சித்திணையின் குன்றா விளக்கம். மற்றொன்று மருதத்திணையின் நந்தா விளக்கம். முன்னது குறவஞ்சி: பின்னது பள்ளு. முன்னது மலையும் மலைசார்ந்த இடத்தின் ஏற்றம், எழில் அவ்விடத்தில் வாழும் குறவர் தம் தோற்றம், தன்மை போன்றவற்றை விளக்குவது; பின்னது வயலும் வயல் சார்ந்த இடத்தின் இயல்பு, அழகு, அவண் உறைவோர் ஆற்றலும் அருமைப்பாடும், பழக்கமும் வழக்கமும் விளக்குவது.

எனவே, ஒன்று குறிஞ்சி நில வாழ்வைக் காட்டும் கண்ணாடி; மற்றொன்று மருதநில மாண்பைப் பிரதிபலிக்கும் பெட்டகம். முன்னது

குறவஞ்சி, பின்னது பள்ளு. இங்ஙனம் குறவன் குறத்தியர்தம் ஆடல் பாடல் குறமாகவும் குறவஞ்சியாகவும் வளர்ந்து விளங்கும் விந்தையை இக்குறவஞ்சி இலக்கியம் பிறந்து வளர்ந்த கதையால் தெளியலாம்.

ஏனைய சிற்றிலக்கியங்களுக்கு இருப்பது போன்று இக் குறவஞ்சிப் பிரபந்தத்திற்குத் திட்டவட்டமான இலக்கணம் ஏதும் இதுகாறும் எழுதப்பட இல்லை. ஒரு குறிப்பிட்ட காலத்தில் இச்சிற்றிலக்கியம் எழுந்திருக்குமாயின் இலக்கணம் எழுதியிருப்பர். அங்ஙனம் இலக்கணம் ஏதுமில்லாமையே இச்சிற்றிலக்கியம் சிறிது சிறிதாக வளர்ந்து சிறந்த செய்தியை உணர்த்தும்.

தோற்றமும் வளர்ச்சியும்: (Origin and its development)

குறவர்தம் ஆடல் பாடல் கண்டு அகமகிழ்ந்த புலவர்கள்—குறத்தி குறிசொல்லி வரும் அழகு கண்டு அகமகிழ்ந்த நல்லிசைப் புலவர் சில்லோர் தாம் யாத்த கலம்பகம் என்னும் சிற்றிலக்கியத்தில் ஓர் உறுப்பாக இதனை வைத்து இதயம் குளிர்ந்தனர். (இதனைக் கலம்பகங்களில் காணலாம்; கலம்பகத்தில் குறம் என்னும் உறுப்பு உண்டு; அங்கே குறத்தி குறி சொல்லுதல் ஒன்றே காணப்பெறும்.) பின்னர் வந்த புலவர் சிலர் 'குறத்திப் பாட்டு' என்றே ஒரு சில பாடல்களைப் பாடி மகிழ்ந்தனர். இதுபற்றியே இலக்கணவிளக்கப் பாட்டியல், பன்னிரு பாட்டியல், வச்சணந்திமாலை, வெண்பாப் பாட்டியல், சிதம்பரப் பாட்டியல் போன்றவற்றில் இலக்கணக் குறிப்புக்கள் காணப்படுகின்றன.

இறப்பு நிகழ்வெதிர் வென்னுமுக் காலமும்
திறப்பட வுரைப்பது குறத்திப் பாட்டே
குறத்திப் பாட்டும் அதனோ ரற்றே.

(பன்னிரு பாட்டியல் 217–18)

எனக் கூறப்படுவதால் பன்னிரு பாட்டியல் எழுதப்படும் காலத்தில் வழக்கில் இருந்தது எனவும், முக்காலமும் குறத்தி கூறுவதாகப் பத்து பத்துப் பாடல்களில் யாக்கப்பெறுவது இக்குறத்திப் பாட்டு என அறிகிறோம்.

அடுத்து வந்த அறிவுசான்ற புலவர்சிலர் நாடோடிகளாகத் திரிதரும் குறவர்தம் பாடற்சிறப்பில் பெரிதும் ஈடுபட்டு, குறத்திப் பாட்டையும் கலம்பகத்தில் உறுப்பாய் அமையும் குறத்தி குறிசொல்லுதலையும் சேர்த்துப் பெருக்கி இசைப் பாடல்களை இடையிடையே கலந்து குறம் என்னும் சிற்றிலக்கியமாகச் செய்தனர். இதன்கண் குறத்தி குறிசொல்லுதற்கு முன்னும் பின்னுமாகச் சிலபல செய்திகள் காணப்பெறும். இதற்கு இக்காலத்து வழங்கும் மீனாட்சியம்மை குறம் ஏற்ற எடுத்துக்காட்டாகும். (ஏனையவற்றிற்குப் பட்டியல் பார்க்க.)

குறம் அமையும் திறம் :

குறத்திற்குப் பாட்டுடைத் தலைவனும் தலைவியும் உண்டு. தலைவனைக் கண்டு காமுற்றாள் தலைவி. இங்ஙனம் காமுற்ற தலைவிக்கு குறத்தி குறி கூறுவதாக அமைவதே குறம். இதன்கண் முதலில் காப்புச் செய்யுள் ஒன்றும், முடிவில் வாழ்த்துச் செய்யுள் ஒன்றும் உண்டு.

குறத்தி, தான் செந்தமிழ்த் தென் பொதிய மலையில் உறைபவள் என அறிமுகப்படுத்திக் கொண்டு தலைவியை வந்தடைந்து, தலைவனோடு அளவளாவும் அரியபேறு உண்டெனத் தலைவியை ஊக்குவித்துத் தரையை மெழுகிப் பிள்ளையார் பிடித்து வைக்கச் செய்து, அவளது கையைப் பார்த்துக் குறி சொல்லத் தொடங்குவாள்.

பேசு மென்குறி மோச மென்றிடில்
ஆர்சொ லும்பரி யாசமே

எனக்கூறி, தூசும் காசும் வைக்குமாறு வேண்டிப் பெற்றுப் பலன் கூறுகின்றாள்.

குறி கூறுமுன்னே தான் வந்த பொதிய மலையைப் பாராட்டி, குறவர் குலச் சிறப்பையும் குறக்குடிக்குரிய இயல்பையும், குடியிருப்பையும் எடுத்தோதி, தலம் பல சென்று குறி சொல்லிய திறம், உறவின் முறையார், அவர்கட்குக் கூறிய குறிகள் பலித்த பான்மை போன்றவற்றையும் பகர்ந்து,

வருங்கால நிகழ்காலங் கழிகால மூன்றுமொக்க
வகுத்துப் பார்த்துத்
தருங்காலந் தெரிந்துரைப்ப தெளிதரிதன் றெங்கள்குறச்
சாதிக் கம்மே

எனச் சாற்றித் தலைவியைக்கொண்டு பிள்ளையாரைத் தென்மூலையில் நிலைநிறுத்தி வழிபாடு செய்தபின் நெற்குறி, பல்லிசொல் பலன் விரிச்சி, தும்மல், ஆந்தை அலறல், முகக்குறி, இடக்கண் துடித்தல் என்பவற்றால் இனியன தேர்ந்து தலைவியின் கைக்குறியும் மெய்க் குறியும் கண்டு கூறுகின்றாள். குறிகூறி முடித்தபின்னர் பாட்டுடைத் தலைவனைப் பரவி விடை பெறுகிறாள். இதுவே குறத்தின் அமைதியும் அழகிய போக்கும்.

பிற்காலத்தில் நிலவிய தமிழ் நாடகங்களில் கணபதி வருதல், கட்டியங்காரன் வருதல், மோகினி வருதல், மோகனராசன் வருதல் போன்ற முதல் நிகழ்ச்சிகள் காணப்படுகின்றனவன்றோ? இந்த சில நிகழ்ச்சிகளின் செல்வாக்கு குறம் என்ற சிற்றிலக்கியத்தோடு சேரும்நிலை ஏற்பட்டது. இதுபோது குறவன் நாடகம் என்ற

நாடகம் நடிப்பதற்காகவே தோன்றியது. (குறவன் நாடகத்தில் குறவன் குறத்தியர்தம் வாழ்க்கைப் பகுதிகள் நாடக முறையில் விளக்கப்பட்டுள்ளன.)

இக்காலத்தில் வாழ்ந்த புலவர்கள் இசை விரவிய குறத்தோடு, நாடக முறையில் அமைந்த இக்குளுவ நாடகப் பாட்டையும் சேர்த்து நாடக முறையில் குறவஞ்சியை இயற்றினர் எனத் தோன்றுகிறது. இதனுல் குறம் என்னும் கலம்பக உறுப்பாகவும், குறத்திப் பாட்டு என்னும் தனிப் பாட்டாகவும் இருந்து இரண்டும் இணைந்து குறம் என்ற இசை விரவிய வருணனை நூலாகத் தோன்றிப் பின்னர் இக் குறத்தோடு பிற்கால நாடகப் போக்கும் — சிறப்பாகக் குளுவன் நாடகப் பாட்டின் சாயலும் சேரக் குறவஞ்சி என்ற நாட்டிய நாடக மாகக் (Dance Dramas of Tamil Nad) திகழ்ந்தது என்பது தெரியவருகிறது.

கலம்பகத்தில் குறம் உறுப்பாக அமைந்து குறத்தி குறி சொல்லுதல் ஒன்றே கொண்டு, பின் குறம் என்னும் சிறு பிரபந்தமாய் இசை விரவ, குறத்தி குறி கூறுதற்கு முன்னும் பின்னுமாகக் குறத்தி கூற்ருகவே சில செய்திகளைக் கொண்டு விளக்கி இறுதியாகக் குறத்தியின் கூற்ருேடு வேறு பலருடைய கூற்றுக்களையும் கொண்டு, நாடக நலமும், நாட்டியத் திறமும் அமைந்த தனிப் பிரபந்தமாக வளர்ந்து விரிந்த கதை அறிந்து இன்புறத் தக்கதாம்.

இனி, குறவஞ்சி 'குறவஞ்சி நாடகம்' எனவும், 'குறவஞ்சி நாட்டியம்' எனவும், 'நாட்டிய நாடகம்' எனவும் அழைக்கப்பெறும் திறத்தைப் 'பல்வளஞ்சேர் குறவஞ்சி நாடகத்தை' எனக் குற்ருலக் குறவஞ்சியிலும்,

> பொருட்குற வஞ்சி நாட்பயம் புகன்றிட விமயச் செல்வி
> கருணைபெற் றுவந்த நாரி கணபதி காப்புத் தானே

என அர்த்த நாரீசுவரர் குறவஞ்சியிலும் வருவதால் அறியலாம்.

குறத்தியின் நாடு, மலை, நகர்ச் சிறப்பு, குறத்தியின் இயல்பு, குறி கூறும் திறமும் தேற்றமும், குறவன் அவளைத் தேடி வருதல், இருவர்தம் உரையாடல் என்பன போன்று குறத்தியின் திறத்தில் அமைந்த செய்திகளே குறவஞ்சிச் சிற்றிலக்கியங்களில் அமைந்திருத் தலினுலும், அனைத்துச் செய்திகளும் அவளைச் சுற்றிச் சுழல்வதாலும் குறவஞ்சி எனப் பெயர் பெற்றது இப் பிரபந்தம் என்னலாம். (குறவஞ்சி குறப்பெண்ணைக் குறிக்கும்.)

குறவஞ்சியின் அமைப்பு முறை:

• குறவஞ்சி இலக்கியங்களின் அமைப்பழகும் உறுப்பமைதியும் அறிதற்பாலது. காப்பு, தோடையம், மங்களம் முதலியன கூறிய

பின் கட்டியங்காரன் வருவான்; சிற்சிலபோது கணபதி எழுந்தருளுதலும் நிகழும். வந்தவன் பாட்டுடைத் தலைவன் பவனி வருதலைத் தெரிவிப்பான்; சிற்சிலபோது எச்சரிக்கை செய்தலும் உண்டு.

பவனி வரும் பாட்டுடைத் தலைவனைப் பந்தடித்து வந்த தலைவி ஒருத்தி கண்டு காமுறுதலும், இருவரின் இயல்பும் எழிலும் கூறப்பெறும். தலைவனைக் காமுற்ற தலைவி விரகவேதனை மேலீட்டால் மன்மதன், சந்திரன், தென்றல், குயில் ஆகியவற்றை நிந்தனை செய்து நொந்து புலம்புவாள். (திருவாரூர்க் குறவஞ்சி போன்றவற்றில் பாட்டுடைத் தலைவனை விளித்து இரங்கலும் உண்டு.)

இந்நிலையில் பாங்கி வருதலும், நிகழ்ந்ததைப் பாங்கி அறிதலும், அவளைத் தலைவி தூது விடுத்தலும், அதுபோழ்து குறத்தி வரவே அவள் இயல்பையும் வரவையும் தலைவிக்குத் தோழி எடுத்துரைத்தலும், குறத்தியை அழைத்தலும், அவள் வந்து வாசல் வளம் செப்பலும் நிகழ்வுறும். (குற்றாலக் குறவஞ்சி போன்றவற்றில் வாசல்வளம் கூறுதல் இல்லை.

வந்த குறத்தியை ஊரும் பேரும் இன்னபிறவும் இடைமறித்துக் கேட்கவே, நாடு, நகர், மலைவளம், சாதிவளம், நதிவளம், தலச்சிறப்பு போன்றவற்றைக் குறத்தி எடுத்துரைப்பாள். (அண்டகோளத்தின் அதிசயம் கூறுதல் கும்பேசர் குறவஞ்சி போன்றவற்றில் உண்டு.)

பின்னர் யார் யாரிடம் குறிசொல்லி எவ்வெப் பரிசுகள்பெற்றாய்? கற்ற வித்தைகள் யாவை? என்பன போன்ற தலைவியின் வினாக்களுக்கு விடையிறுக்குமாற்றான் கிளை விசேடம், குறி விசேடம், பெற்ற பரிசில் இவை இவை எனவும் குறத்தி கூறுவாள். (தலைவனுக்குக் குறிசொன்னதாகச் சில குறவஞ்சிகளில் இல்லை; சிலவற்றுள் உண்டு)

அடுத்து, தன்கையைப் பார்த்துக் குறி சொல்லுமாறு தலைவி கேட்டலும், குறத்தி வழிபாட்டுக்குரியன செய்வித்து, தெய்வம் பராவிக் குறிசொல்லத் தொடங்கித் தலைவி தலைவன்பால் விருப்புற்றதைக் குறிப்பாகவும் வெளிப்படையாகவும் கூறி, அவனை அடைவாய் எனக் கூறிச் சன்மானம் பெற்று விடைபெறுகிறாள். (இந்நிலையில் தூது சென்ற தோழியும் தலைவன்பால் பெற்ற மாலையோடு மீள்வதாகச் சில குறவஞ்சிகளில் குறிக்கப்படுகிறது.)

இங்கே குறவஞ்சி இவ்வண்ணமிருக்க, குறவன் தன் கையாளாகிய குறவனோடு வேட்டைக்கு வந்து, வலையமைக்கும் வகையைக் குறவனுக்கு உணர்த்த, பறவைகள் வரவே கண்ணி வைக்க, அவை தப்புதலும், ஒருசில் ஓடிவிடுதலும் கூறப்பெறும்.

இன்னணம் பறவை வேட்டையில் சிந்தை செலுத்தியிருந்த குறவனுக்குக் குறத்தியின் நினைவு வரவே, பிரிவாற்றாமையால் வருந்துதலும், அவள் இருக்குமிடம் அறிந்து வருமாறு குறவனை வேண்டலும், அவன் குறத்தியின் அடையாளம் வினவுதலும், குறவன் அவற்றைச் செப்பலும், குறவன் அவளைப் பாட்டுடைத் தலைவன் நகரில் காணலாம் என்றலும், குறவனும் அவண் சென்று அவளைக் கண்டு ஆற்றாமை உணர்த்தி, வினுபல எழுப்பலும், குறத்தி விடை பல விடுத்தலும், பின்னர் இருவரும் சேர்ந்து தலைவனை வாழ்த்தலோடு குறவஞ்சி முடிதலும் உண்டு. (சில குறவஞ்சிகளில் இருவரும் ஏசிப்பேசிக்கொண்டிருக்கும்போது பாட்டுடைத் தலைவன் பவனி வரவே அவரைக் கண்டு வாழ்த்தி வணங்கி விடைபெறுதலும் உண்டு.) இதுதான் குறவஞ்சியின் கதையாகும்.

இதில் குறவனுக்குச் சிங்கன் என்றும், குறத்திக்குச் சிங்கி எனவும் பெயர் அமையும். குறவனது தோழனுக்குக் குளுவன், குழுவன், நூவன், புலியன் எனப்பெயர் அமையும்; பாட்டுடைத் தலைவிக்கும் மதனவல்லி, வசந்தவல்லி, காமரசவல்லி, தெய்வ மோகினி, செகன்மோகினி, மோகினி, இராசமோகினி, மதனரதி, மோகனவல்லி, மோகனுங்கி எனப் பற்பல பெயர்கள் பற்பல குறவஞ்சிகளில் அமைகின்றன.

விருத்தம் அகவல், வெண்பா, கொச்சகக்கலிப்பா, கழிநெடில், முதலிய செய்யுட்களைக் கொண்டு, வசனம் விரவ, இடையிடையே சிந்து, கண்ணிகள் முதலிய நாடகத் தமிழால், கீர்த்தனை வடிவில் குறவஞ்சிச் சிற்றிலக்கியம் யாக்கப்பெறும்.

குறவஞ்சிகளில் பெரும்பாலான தெய்வத்தின் மேலும், சில குறுநில மன்னர்கள் பெயரிலும், சில வள்ளல்கள், பெரியோர்கள் மேலும் பாடப்பெறும்; புலவர்களில் பலகாலத்தவர், பல நாட்டினர், பலசமயத்தினர் பாடியனவாகப் பல குறவஞ்சிகள் காணப்படுகின்றன. (அவற்றைப் பட்டியலில் காண்க.)

இதுகாறும் கண்டவற்றால் இலக்கியத் தோற்றத்தின் இருவேறு நிலையினையும், உள்ளத்தை உயரிய நிலையில் அமைக்கும் திறத்தில் குறவஞ்சி அமையும் என்பதும் அது முதலில் கலம்பகத்தில் உறுப்பாக அமைந்து, அதன்பின் குறத்திப் பாட்டோடு இணைந்து குறம் என்னும் சிற்றிலக்கியமாகி, அதனோடு பிற்கால நாடக முறையும் குளுவநாடகப் போக்கும் சேர்ந்து குறவஞ்சி ஆயிற்று என்றும், குறத்தின் போக்கு இன்னது என்றும், குறவஞ்சியின் அமைப்பு இன்னது என்றும், பெயர் அமையும் பெற்றியும், யாப்பு அமைதியும் கண்டோம்.

குறவஞ்சி இலக்கியத்தின் ஏற்றமும் தோற்றமும் கண்டோம், இனி அதன் இனிமையும் அழகும் காண்பாம்.

(வளரும்)

எண்	குறவஞ்சியின் பெயர்	ஆசிரியர் பெயர்
1	மதுரை மீனாட்சியம்மை குறம்	குமரகுருபர அடிகள்
2	விதுரர் குறம்	புகழேந்திப் புலவர்
3	அண்டவெளிக் குறம்	?
4	மின்னொளியாள் குறம்	?
5	திருக்குருகூர் மகிழ்மாறன் பவனிக் குறம்	?
6	திருக்குற்றாலக் குறவஞ்சி	திரிகூடராசப்பக் கவிராயர்
7	ஸ்ரீ சரபேந்திர பூபால குறவஞ்சி நாடகம்	கொட்டையூர் சிவக்கொழுந்து தேசிகர்
8	கும்பேசர் குறவஞ்சி நாடகம்	பாபநாச முதலியார்
9	பிரகதீஸ்வரர் குறவஞ்சி	கொட்டையூர் சிவக்கொழுந்து தேசிகர்
10	ஞானக் குறவஞ்சி	குமரகுருபர தேசிகர்
11	வண்ணைக் குறவஞ்சி	விசுவநாத சாத்திரியார்
12	நகுலமலைக் குறவஞ்சி	விசுவநாத சாத்திரியார்
13	திருவாரூர் தியாகேசர் குறவஞ்சி	?
14	அர்த்தநாரீசுவரர் குறவஞ்சி	?
15	அழகர் குறவஞ்சி	?
16	பெத்தலஹேம் குறவஞ்சி	வேதநாயக சாத்திரியார்
17	தமிழரசி குறவஞ்சி	புலவரேறு, அ. வரதநஞ்சையப் பிள்ளை
18	முருகர் குறவஞ்சி	நல்லவீரப்ப பிள்ளை
19	மருங்காபுரிச் சிற்றரசர் குறவஞ்சி	வெறிமங்கை பாகக் கவிராயர்
20	சிற்றம்பலக் குறவஞ்சி	K. N. தண்டபாணி பிள்ளை
21	தத்துவக் குறவஞ்சி	முருகேச பண்டிதர்
22	ஞானரத்தினக் குறவஞ்சி	பீரு முகம்மது

எண்	குறவஞ்சியின் பெயர்	ஆசிரியர் பெயர்
23	சோழக் குறவஞ்சி	கம்பர்
24	முத்தானந்தர் குறவஞ்சி	ஆற்றூர் முத்தானந்தர்
25	கரைக் குறவஞ்சி	யாழ்ப்பாணம் சுப்பையா
26	பொய்யாமொழியீசர் குறவஞ்சி	சிதம்பர தத்துவலிங்கையன்
27	கொடுமுடிக் குறவஞ்சி	?
28	திருமலையாண்டவர் குறவஞ்சி	?
29	செந்தில் குறவஞ்சி	?
30	சுவாமிமலை குறவஞ்சி	?
31	வைத்திலிங்கக் குறவஞ்சி	கணபதி ஐயர்
32	சிதம்பரக் குறவஞ்சி	செல்லப்ப பிள்ளை
33	நல்லைநகர் குறவஞ்சி	யாழ்ப்பாணம் கந்தப் பிள்ளை
34	வருணபுரிக் குறவஞ்சி	மாரிமுத்துப் பிள்ளை
35	பிலிப்பு உரொட்ரிக்கோ முத்துகிருட்டினன் குறவஞ்சி	இன்புக்கவி
36	கச்சேரி முதலியார் குறவஞ்சி	இன்பக் கவி
37	குறவஞ்சி	தாமோதரக் கவிராயர்
38	மெய்ஞானக் குறவஞ்சி	முகம்மது
39	விராலிமலைக் குறவஞ்சி	?
40	தஞ்சை வெள்ளைப் பிள்ளையார் குறவஞ்சி	?
41	திருவிடைக்காழிக் குறவஞ்சி	?
42	பெம்பண்ண கௌண்டன் குறவஞ்சி	?
43	துரோபதைக் குறவஞ்சி	?
44	திருப்பாகையூர் குறவஞ்சி	?
45	கொங்கர் குறவஞ்சி	சா. து. சு. சோஜி

" தண்மதியும், தமிழ் மறையும் "

வித்துவான், வி. சச்சிதாநந்தம், சோழவந்தான்.

இயற்கையில் மறைந்து கிடக்குமிடங்களை எல்லாம் காணவேண்டும் என்பது மனித அவா. அவாவின் காரணமாக இமயத்தின் கொடு முடியையும், அலைகடலின் ஆழத்தையும், குடைந்து செல்லுதற்கரிய குகைகளையும் கண்டு, செய்திகளைக் கொண்டுவந்து கொடுத்தான் மனிதன். விண்ணுலகு சென்று தண்மதியின் தன்மையையும் அறிய அரியதோர் முயற்சியினை மேற்கொண்டு வருகின்றது அறிவிய லுலகம் என்பதை அனைவரும் அறிவோம். அறிவு, பொருளின் புறத் தோற்றத்தைக் காண்கிறது; உணர்வு பொருளை வாழ்க்கையோடு பொருத்திக்காட்டுகிறது. அறிவும் உணர்வும் பெற்ற கவிஞர்கள் இயற்கையோடு இணைந்த வாழ்வுதான் சிறந்த வாழ்வு என்று கூறிச்சென்றனர். எனவே ஈராயிரம் ஆண்டுகட்கு முன் தோன்றிய தமிழ்மறை இயற்கைப் பொருளாய தண்மதியை வாழ்க்கையோடு பொருத்திக்காட்டும் தன்மையினை ஈண்டு எடுத்துக்காட்டுவாம்.

வாழ்விற்கு அடிப்படை காதல். காதலில்லாத வாழ்வு காட்டு மிராண்டி வாழ்வாகும். 'காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கினுல்' கருணைவடிவாகிய இறைவனை அடையலாம் எனப் பேசுகிருர் ஒருவர். ஆடவன் பெண்ணிடத்திலே கொள்ளும் உள்ளநெகிழ்வே காதலாகும். உள்ள நெகிழ்வு தொடர்புடையார் யாவரிடத்தும் செல்லுதல் அன்பு என்றும் ஆன்ருேர் கூறுவர். காதல், அன்பு, அருள் ஆகிய மூன்றினையும் பெற்றவனே முழு மனிதனுவான். அடிப்படை வாழ்க்கையாகிய காதல் வாழ்க்கையைப் பற்றிக் கூறும் இன்பத்துப் பாலில் மட்டும் ஆறு இடங்களில் தண்மதியை இணைத்துக்கூறும் தன்மையைத் தமிழ் மறையாம் திருக்குறளில் காணலாம்.

நல்ல நிலவுக்காலம். விண்மீன்கள் பல சூழத் தண்மதி தோன்றி வெண்ணிறத்தைப் பரப்புகிறது. தலைவனெருவன் தன் காதலியைக் காண்கிருன். அவளது முகம் பொலிவுற்றுத் திகழ்கிறது. விண்ணிலே உள்ள மதியும், தன்னருகுள்ள தலைவியின் முகமும் ஒன்றெென நினைக்கிருன். விண்மீன்கள் இடைவிட்டு ஒளிரும் நிலையையும், இடம் விட்டுப் பெயரும் தன்மையையும் காண்கின்ருன். காரணம் என்ன என்று எண்ணுகிருன். காரணம் ஒன்று அவன் கருத்திற்குப் புலனுகிறது. இரு வேறுபட்ட பொருள்கள் ஒன்ருகத் தெரிந்தால் மருட்சி கொள்வது இயற்கைதானே? எனவே வட்ட வடிவும், வெண்மை ஒளியும் உடைய மதியையும், மடந்தை முகத்தை யும் வேறுபடுத்திக் காணமுடியாமல் விண்மீன்கள் மருள்வதாகக் காரணம் கற்பிக்கிருன் தலைவன். இனி அக்குறளைக் காண்போம்,

" மதியும் மடந்தை முகனு மறியா
பதியிற் கலங்கிய மீன் ". (குறள்–1116.)

உணர்ச்சியும், மயக்கமும் கொண்டு உள்ளக் காதலியின் தெள்ளிய முகத்தைக்கண்ட அவன் உணர்வு பெற்று மதியையும், மடந்தை முகத்தையும் கூர்ந்து கவனிக்கிருன். தன்ஞல் விரும்பப் பட்ட பொருள் மற்றப் பொருள்களெல்லாவற்றிலும் சிறப்புடைய பொருளாக இருக்கிறது—இருக்கவேண்டும் என்று நினைப்பதும், பிற பொருளுக்கு ஏதாவது குறை கற்பித்துத் தன் பொருள் உயர்வுடையது என அமைதி கொள்வதும் மனித இயல்பல்லவா? அம் முறையில் தலைவன், 'மதியிலே களங்கமிருப்பதைக் காண்கிருன்; ஆனல் தன் காதலியின் முகம் மறுவின்றி விளங்குவதை அறிந்து மகிழ்கின்ருன். களங்கமுடைய மதியைவிட, களங்கமில்லாத காதலியின் முகமே உயர்வுடையது என நினைக்கிறது அவனது உள்ளம். பெண்ணின் முகம்போலத் தண்மதியும் வெள்ளொளி பரப்பும் திறம் பெற்றிருந்தால் தன்னுடைய காதலுக்கு உரிமையாகும் என்றும் தலைவன் கூறுகின்ருன். இக்கருத்துக்களை,

"அறுவாய் நிறைந்த அவிர்மதிக்குப் போல
மறுவுண்டோ மாதர் முகத்து" என்ற குறளும்,

"மாதர் முகம்போல் ஒளிவிட வல்லையேல்
காதலை வாழி மதி" என்ற குறளும்

அழகுற எடுத்துக் காட்டுகின்றன.

தமிழகத்துப் பெண்மக்கள் தங்களுக்குரிய காதலர்களைத் தேர்ந்தெடுத்த பின்னர்ப் பலரறியத் தோன்ருத கற்பு நெறியும், தம் கணவர்க்கே உரித்தாக்கும் கவினழகும் உடையவர்களல்லவா? கணவன் கடல் கடந்து சென்று பொருள்தேடி வரும் வரையில் கல்லுருவம் பெற்ற கற்பரசியின் வரலாறும், கணவனுக்குற்ற பழியைப் போக்கிக் கற்பின் திறத்தை நிலைநாட்டிய கண்ணகியின் திறமும் தலைவனின் எண்ணத்திலே தோன்றுகின்றன. தன் காதலியும் சிறந்த கற்புடையவள் என்பதை எண்ணுகிருன். உடனே தலைவியின் முகத்திற்கு ஒப்புமை கூறிய சந்திரனைச் சற்று உற்று நோக்குகிருன். பலரும் அறியச் சந்திரன் விண்ணில் வருவதைக் காண்கின்ருன். மண்ணுளோர் பலரும் காண விண்ணில் வருவதால், தான் மட்டும் கண்டு நுகரும் கவின்பெற்றக் காதலியின் தன்மைக்கு—கற்பு நெறிக்கு மாறுபட்டது மதி என்று கருதுகிருன். மலர் போன்ற கண்ணையும், மாருத கற்பையும் கொண்ட என் காதலியின் முகம் போன்று விளங்க வேண்டுமானல் மதியே! நீ பலர் காணும்படியாகத் தோன்ருதே என்று கூறுகிருன், தலைவன். தலைவனின் உள்ளப் பண்பையும், தலைவியின் கற்பு நெறியையும் திங்களோடு இணைத்துக் கூறும் தமிழ் மறையைக் காண்போம்.

"மலரன்ன கண்ணுள் முகமொத்தி யாயின்
பலர்காணத் தோன்றல் மதி" (1119)

என்பது குறளாகும்.

தனியிடத்திருந்த தலைவியும், தனிப்பட்டுவந்த தலைவனும் ஒருவரையொருவர் கண்டனர். பருகிய நோக்கெனும் பாசத்தால் பிணிப்புண்டனர். உள்ளம் கலந்து, உணர்வு கலந்து, உடலும் கலந்தனர். பின்னர், பிரியேன்; பிரியின் தரியேன் எனப் பேசி விட்டுச் சென்றான் தலைவன். போய்ப் பல நாட்கள் ஆகின்றன. தலைவனை எண்ணி வருந்துகிறாள் தலைவி. உடல் மெலிகிறது. கைவளையல்கள் தாமாகக் கழன்று விழுகின்றன. தலைவியின் வேறுபாடு கண்ட ஊரார் அலர் தூற்றுகின்றனர். அறிந்த தலைவி நினைந்து பார்க்கிறாள். 'நாம் ஒரே ஒருநாள் யாரும் அறியாத இடத்தில் தெரியாத முறையில் தலைவனைச் சந்தித்தோம். அதனாலுண்டாகிய அலரோ மிகப்பரந்து விட்டதே' என்று வியக்கின்றாள். தன் நலனுண்டபோது தனக்குவமையாகக் கூறிய தண்மதியே தலைவியின் நினைவிற்கும் வருகிறது. ஒருநாள் திங்களைப் பாம்பு கொண்ட தன்மை குறித்து யாதொரு இயைபுமில்லாத—வருத்தமில்லாத உலகமக்கள் பலரும் தலைமுழுகி, நோன்பிருந்து வருத்த முரைக்கும் தன்மையராய் இருக்கின்ற நிலைபோன்றும், பலருக்கும் தீங்கு செய்யாமல் தன் ஒளி பரப்பி விண்ணிலே வரும் மதியைப் பாம்பு பற்றியமை எவ்வளவு கொடுமையுடையதோ அது போன்றும் தன்னையும், தன் தலைவனையும் பற்றி ஊரார் தூற்றும் அலர் உள்ளது எனத் தலைவி எண்ணுகிறாள்.

"கண்டது மன்னும் ஒருநாள் அலர்மன்னும்
திங்களைப் பாம்புகொண் டற்று" (1146)

என்பது குறளாகும்.

அலர் தூற்றப் பிரிந்து சென்ற தலைவனை நினைந்து புலம்புகிறாள் தலைவி. ஒருயிர் ஈருடல் என்று உணர்த்திய தலைவன் அன்பின்றித் தன்னை மறந்து வாழ்வதாக எண்ணி வருந்துகிறாள். இராக்காலமாகையால் துணையொடு வதியும் பொருள்களைக் காணுந்தோறும் தலைவிக்குத் தன் துயர் மிகுகின்றது. ஆற்றாமை காரணமாகத் தலைவனைக் காணவேண்டும் என்ற அவா எழுகிறது. தலைவனைத் தேட முற்படுகிறாள். வெண்ணிலா மேகத்திடை மறைந்து மறைந்து தன் ஒளியை வீசிக்கொண்டிருக்கிறது. இரவிலே தலைவனைக் காண ஒளியின் துணையை நாடுகின்றாள். அன்னை, தந்தை முதலாயினோரும், அலர் தூற்றும் ஊராரும் உறங்குகின்ற நேரத்தில் தனக்குத் துணையாகவும், இருள் போக்கும் ஒளியாகவும் விளங்கக் கூடியது வெண்ணிலாவொன்றுதான். நிலவை நோக்கிக் கூறுகின்றாள் தலைவி. ஒளி கொடுக்கும் மதியே! நீ ஒளியாமல் இருக்க வேண்டும். என்னைவிட்டுப் பிரிந்தாலும், என் உளத்தை விட்டுப் பிரியாத தலைவனைக் கண்ணினால் காணவேண்டும்; மறையாமலிருக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்ளும் முறையிலமைந்த குறளை நோக்குவோம்.

"விடாஅது சென்றாரைக் கண்ணினால் காணப்
படாஅதி வாழி மதி" (1210) என்பது குறளாகும்.

காதல் வாழ்வு கற்பு வாழ்க்கையாக மாறி, சமுதாய வாழ்வாக மலருகிறது. சமுதாய வாழ்வில் மக்களின் மனமும் பலவாறு வேறு படுகின்றது. இளைய உள்ளங்கள் சாதியையோ, சமயத்தையோ, பொருளையோ எண்ணிப் பார்ப்பதில்லை; எண்ணுவதற்கும் மனத் திண்மை இல்லை. இன்ப வாழ்வையே முன்னிறுத்தி ஏனைய வாழ்வைப் பற்றிக் கவலைப்படாத காதல் வாழ்வு பழுதிலா வாழ்வாக அமைந்தும், தன்னலம், தற்புகழ்ச்சி, தன் முனைப்பு இவைகளால் பழியேற்கும் வாழ்வாக சமுதாய வாழ்வு அமைந்து விடுகிறது. சமுதாய வாழ்வில் குற்றம் செய்வதற்கு அஞ்சுபவர் சிலர்; குற்றமே செய்து, குற்றத்தை மறைத்து மறந்து வாழ்பவர் சிலர். முன்னவர் தினையளவு குற்றம் புரிந்தாலும், பனையளவாக எண்ணிப் பழி துடைக்க முற்படுவர்; குற்றத்தைக் குற்றம் என்று ஒப்புக்கொண்டு உணர்ந்து திருந்தி வாழ முற்படும் உயர் குணமும் அவர்களிடம் உண்டு. பின்னவர் பனையளவு குற்றம் செய்தாலும் தினையளவு கூடக் கவலையுறமாட்டார்கள்; தன்மானமின்றியும் தன் வாழ்வை நடாத்தத் தயங்கமாட்டார்கள்; அன்பு, அறம், பண்பு முதலியவை அவர்களுக்கு வம்பாக இருக்கும்; குற்றம் செய்தாலும் குற்றமே அவர்கட்கு இயல்பாகையால் மற்றவர்களும் பழிகூறமாட்டார்கள். ஆனால் நல்லவர்கள் சிறு குற்றம் செய்தாலும் மிகப்பெரிதும் பழிக்கப் படும் நிலை ஏற்பட்டுவிடும். காரணம் நல்லவர்களைத்தான் நாடும், உலகமும் உயர்குடிப் பிறந்தவர்கள் என்று எண்ணிக்கொண்டிருக் கிறது. நல்லவர்கள் பெருகி வாழ வழிவகுக்கும் தமிழ்மறை—குற்ற மிலாமல் வாழவேண்டும் என்று கூறவந்த திருக்குறள் திங்களைத் துணையாக வைத்தே தெள்ளிய அறிவைப் புகட்டுகின்றது. வானத்திலே உள்ள முழுமதியில் சிறு மறுவானது—பள்ளமானது இருக்கின்ற நிலை உலகிலுள்ளார் அனைவரும் காணக்கூடிய முறையில் தெரிவதைப்போல வான்புகழ்கொண்ட உயர்குடிப்பிறந்தோராய நல்லவர்கள் செய்யும் மிகச்சிறிய குற்றமும் எல்லோர்க்கும் புலனாகும் என்று குற்றம் மறைக்கும் பெருமையைக் கூறுகின்றது குறள்.

"குடிப்பிறந்தார் கண்விளங்கும் குற்றம் விசும்பின்
மதிக்கண் மறுப்போ லுயர்ந்து" என்பது குறளாகும்.

உலகநாடுகள் யாவும் நட்புரிமை கொண்டு வாழவேண்டும் என்ற அரிய கருத்து ஐக்கியநாட்டு அவை மூலம் இன்று அறைகூவப் பட்டு வருகின்றது. இதனை அன்றே தமிழ் மறையானது நட்பு கொள்ளுதலின் சிறப்பினையும், தேர்ந்தெடுக்கும் திறத்தினையும் பற்றிப் பல அதிகாரங்களாகக் கூறி வற்புறுத்தியமை பெரிதும் பாராட்டுதற்குரியதாகும். நட்பினை இருவகையாகப் பிரிக்கலாம். ஒன்று உள்ளம் கலந்த நட்பு; மற்றொன்று உணர்ச்சிகொண்ட நட்பு.

உள்ளம் கலந்த நட்பானது நாம் உதவி செய்தாலும், செய்யா விடினும் இறுதிவரை பிரியாது இலங்கும்; கூடுமானால் தவறு செய்தாலும் இடித்துரைத்துத் திருத்தும் பண்பும், உடுக்கை இழந்தவன் கைபோன்று இடுக்கண் நீக்கும் இயல்பும் அதனிடத்து உண்டு. உணர்ச்சிகொண்ட நட்பு, ஒருவரையொருவர் காணும் போதே உணர்ச்சியொடு பழகி உறவு கொண்டாடும்; செல்வமும் செல்வாக்கும் குறைந்தால் தாமும் நீங்கிவிடும். குற்றமே செய்தாலும் அதனையே பெருமையுறக் கூறி நமது முகம் மலரும்படியாக நட்பு கொள்ளும். குணத்தையும், குற்றத்தையும் நாடினால்தான் பொருளின் உண்மைத் தன்மையை அறியமுடியும். அதுபோல நட்பினையும் நாடிக்கொண்டால்தான் வாழ்விற்குப் பயன்படும் என்று உணர்த்தவந்த தமிழ் மறைக்குத் தண்மதியே தன் நினைவில் தோன்றுவதைக் காணலாம். அறிவுடையவர்களின் நட்பு நாளும் வளர்ந்து பெருகி அழியாத நட்பாக அமையும் என்பதற்கு நாளும் வளர்ந்து, பெருகி முழுத்தன்மையடையும் நிறைமதியையும், பேதையரின் நட்பு முதலில் மிகுந்து, குறைந்து மறைந்துபோகும் என்பதற்கு முழுமதியானது நாளுக்கு நாள் சிறுத்துக் குறுகி மறைந்துபோகும் பிறைமதியையும் இணைத்துக் கூறும் திறத்தினை நோக்குவோம்.

> "நிறைநீர நீரவர் கேண்மை பிறைமதிப்
> பின்னீர பேதையார் நட்பு" என்பது குறளாகும்.

இதுகாறும் கூறியவாற்றால், இயற்கையில் மறைந்துள்ள விடங்களைக் காணவேண்டும் என்பது மனித அவா என்பதும், வாழ்விற்கு அடிப்படை காதல் வாழ்வாகும் என்பதும், காதல், அன்பு, அருள் ஆகிய மூன்றையும் கொண்டவனே முழு மனிதனாவான் என்பதும், தலைவன், தலைவி ஆகியவர்கள் தங்கள் வாழ்விலே கொள்ளக்கூடிய உயர் பண்புகளைத் தமிழ் மறையானது தண்மதி மூலம் எங்ஙனம் விளக்குகிறது என்பதும், தமிழகத்துப் பெண்கள் கற்பு நெறியில் சிறந்தவர்கள் என்பதும், நல்லவர்கள் செய்யும் சிறு குற்றம் வையக முழுவதும் தெரிந்து இழிநிலை ஏற்படுத்தும் என்பதும், நட்புகொண்டு வாழ்வதன் இன்றியமையாமைக்குரிய நிலை என்ன என்பதும், ஆயிரத்து முந்நூற்று முப்பது குறட்பாக்களிலும், எட்டு — குறட்பாக்களிலே மதியை முன்னிறுத்தி அறிவு கொளுத்தும் தமிழ் மறையின் தன்மை அறிந்து போற்றற்குரியதாகும் என்பதும், இயற்கைப் பொருளின் புறத்தோற்றத்தை அறிவது அறிவு; இயற்கைப் பொருளை வாழ்க்கையோடு பொருத்திக்காட்டுவது மெய்யறிவு என்பதும், குறள் கூறும் நெறியிலே சென்றால்தான் நல்லவர்களாக வாழமுடியும் என்பதும் தெற்றென விளங்கும்.

வணக்கம்!

கவிதையும் ஒழுக்கமும்.

ச. அகத்தியலிங்கம், M.A., B.Sc.,
தெ. தி. இந்துக்கல்லூரி, நாகர்கோவில்.

கலை என்று தோன்றியதோ அன்றே அதன் திறனாய்வும் தோன்றிவிட்டது. அதே போன்றுதான் கலை தோன்றியவுடன், எதற்காகக் கலை? என்ற வினாவும் எழுந்துவிட்டது. கலை என்றால் என்ன? கலையின் குறிக்கோள் என்ன? என்றின்னோரன்ன சிக்கல்கள் திறனாய்வாளரிடையே தோன்றின. அவரவர் மன நிலைக்கேற்ப இச்சிக்கல்களை ஆராய்ந்தனர். கிரேக்க அறிஞர் பிளேட்டோவின் காலம் முதல் இன்று வாழ்கின்ற திறனாய்வாளர்கள் வரை, பலர் பல்வேறு கோணங்களினின்றும், ஆராய்ந்து அவரவர் முடிவுகளைக் கூறியுள்ளார்கள். அவற்றை இரண்டு பெரும் பிரிவாகப் பிரித்துக்கொள்ளலாம். மக்களுக்கு இன்பம் கொடுப்பதே கலையின் நோக்கம் என்பர் ஒருசாரார். அழகுணர்ச்சி ஒன்றினையே கொண்டு அதனால் மனிதனை ஈர்த்துத் தன்னை மறக்கச்செய்து அதன் வயப்படுத்துவதே கலை. மக்களுக்கு வேண்டிய ஒழுக்க நெறிகளைக் கற்பித்து அதனால் மக்களின் வாழ்க்கையினைச் செம்மைப்படுத்துவதுதான் கலையின் நோக்கமாக இருத்தல் வேண்டும் என்பது இரண்டாவது சாரார் கொள்கையாம்.

கவிதை சிறந்த கலை. கலையினுள் மிக வன்மை பெற்றது. கலைகளைப் பற்றி ஆராய்கின்ற சிறந்த திறனாய்வாளர்கள் கவிதைக் கலையினையும் நன்கு ஆராய்ந்தனர். இலக்கியத் திறனாய்வாளர்கள் அனைவரும் மேற்கண்ட சிக்கல்களைக் கவிதைக் கலையிலும் ஏற்றி ஆராய்ந்தனர். ஆகவே கவிதை கவிதைக்காகவா? என்ற வினா அவர்களது உள்ளங்களில் ஊடுருவி நின்றது.

கிரேக்க அறிஞன் 'பிளாட்டோ' கவிதையையே வெறுத்தார். கவிதை அனைத்துமே பொய்த்தோற்றத்தை (Illusion) அடிப்படையாகக் கொண்டது என்பது அவர் கொள்கை. கலையினுடைய தன்மையே ஒழுக்கக்கேடானது என்ற எண்ணம் கொண்டவர். "ஹோமர்", "ஹெசியாட்" போன்ற கவிஞர்களின்மீது குற்றம் கண்டார். கவிஞர்கள் தங்கள் உள்ளங்கட்கேற்பக் கடவுளைப் படைப்பதும், உருப்படுத்தவும் செய்வர். நீதி கூறுபவர் என்ற முறையில் கவிதையை அவர் ஒத்துக்கொள்ளவில்லை.

ஆனால் அரிஸ்டாட்டில் கவிதையை வெறுக்கவில்லை. கவிதை மகிழ்ச்சி தருதலைக் குறிக்கோளாகக் கொண்டிருத்தல் வேண்டும்

என்பது அவர் கொள்கை[1]. கவிஞன் சிறந்த ஒழுக்கக் கருத்துக்களைக் கூறுதல் வேண்டும் என்ற நியதி இல்லை. அது அவனுடைய கடமையும் அன்று. துன்பமும் துயரமும் தோய்ந்த இவ்வுலகில் வாழும் மனிதனுக்கு ஆறுதலும் இன்பமும் கொடுப்பது கவிதை. இத்தன்மை இருந்தால் மாத்திரம் அவன் சிறந்த கவிஞனாவான். பேசும் பொருள் எதுவாக இருப்பினும் நம் உள்ள உணர்வுகளைத் தூண்டி இன்ப வெள்ளத்தில் மூழ்கச் செய்யவேண்டும் என்று கருதுகின்றனர். திரு. வால்டேர் பேட்டர் என்னும் அறிஞர் "சிறந்த படிப்பினைகளைத் தருவதும், சட்டங்களை இடுவதும் சிறந்த எண்ணங்களைத் தூண்டுவதும் கவிஞனின் கடமையன்று. ஆனால் இயந்திர வாழ்வினின்றும் தம் எண்ணத்தைத் திருப்பி அவ் வாழ்வு தராத உணர்ச்சிகளைத் தூண்டுவதுதான் கவிஞனின் பண்பாகும்"[2] என்பர்.

கவிஞர்கள் சிறந்த கற்பனையாளர்கள்; சிந்தனையாளர்கள். தன்னை மறந்து பாடுகின்ற கவிஞர்களின் கவிதைகளில் நுழைந்து நுழைந்து செல்லுதலால் கவிதையின் பயனை இழந்து விடுகிறோம் கவிதையின் முருகியல் உணர்வை அனுபவிக்காமல் இருந்துவிடுகின்றோம். தன்னை மறந்து நிற்கின்ற கவிஞனைப் போன்று கவிதையைப் படிக்கும் நாமும் நம்மை மறந்து நிற்கும் போதுதான் அக்கவிதையை உண்மையாக அனுபவிக்கிறோம். இந்த அனுபவத்தைத்தர கவிஞன் நீதிக் கருத்துக்களையும் ஒழுக்க நுணுக்கங்களையும் கூறவேண்டிய தேவை இல்லை என்று வாதிப்பர் சிலர்.

முருகுணர்ச்சியைத் தருவதுதான் கலை. உள்ளத்தில் உவகையை எழுப்பாத எதுவும் கலையாக முடியாது[3]. ஆனால் அதே நேரத்தில் கலையை அனுபவிப்பவன் மனிதன் என்பதையும் மறந்துவிடலாகாது. ஆறறிவு படைத்தவன் மனிதன் என்பதையும் அவன் வையத்துள் வாழ்வாங்குவாழ்பவன் என்பதையும் மறக்க முடியாது. எனவே அவன் வாழ்வைச் செம்மைப்படுத்தும் செய்திகளைக் கவிதைகள் ஒதுக்கித் தள்ளலாகாது. அதே நேரத்தில் அக்கவிதைகள் கவித்துவம் அடங்கினதாக, முருகுணர்ச்சியைக் கொடுப்பதாக, உள்ளங்களை ஈர்த்து தன்வயப்படுத்துவதாக இருத்தல் வேண்டும். கவிதையின் முதல் நோக்கம்

1. "The function of the Poetry is to give Pleasure" Aristotle.
2. The work of the great Poet is not to teach lessons or enforce rules or even to Stimulate us to noble ends; but to withdraw the thoughts for a little While from the machinery of life, to fix them, with appropriate emotions on the Spectacle of those great facts in man's existence which no machinery affects".
3. All art is dedicated to Joy. The right art is that alone which creates-the highest enjoyment Shiller.

உவகையைத் தருவதாகவும், இரண்டாவது நோக்கம் கவிதை உண்மைக்கும், கவிதை அழகுக்கும் இழுக்கு ஏற்படாதவாறு ஒழுக்க உண்மைகளைக் கூறுவதாகவும் அமைதல் வேண்டும்.

வாழ்விலிருந்து முகிழ்ப்பதே கவிதை. வாழ்க்கையில் காணும் சில செய்திகள் கவிஞன் உள்ளத்தைக் கவருகின்றன. அவற்றை நன்கு அறிய மீண்டும் மீண்டும் சிந்திக்கின்றான். சிந்தித்த கவிஞன் நன்கு உணருகின்றான். அந்த உணர்வு அவனைப் பல நேரங்களில் தாக்குகிறது. சில நேரங்களில் தன்னை மறந்து உணர்ச்சிவயப்படுகின்றான். கவிஞனின் உணர்ச்சி கவிதையாக முகிழ்க்கிறது. முகிழ்க்கின்ற கவிதைகளில் அவன் கண்ட செய்திகள், அவற்றைப் பற்றிய எண்ணங்கள், ஆய்வுகள் போன்றவை நன்கு படம் பிடித்துக் காட்டப்படுகின்றன. இதனால் தான் சிறந்த கவிஞர்கள் சிறந்த தத்துவ ஞானிகளாகவும் சிந்தனை யாளர்களாகவும் தோன்றுகின்றனர்[4]. இந்த நிலை எய்தும்போது அவர்களின் கவிதைகளில் சில தத்துவங்கள் கலந்துவிடுகின்றன. "உள்ளுவதெல்லாம் உயர்வுள்ளல்" என்பது தமிழ்ப் பழமொழி யன்றோ. இதன் காரணமாகத்தான் வொட்ஸ்வொர்த் என்ற ஆங்கிலக் கவிஞனை மாத்தியூ ஆர்னல்ட் "பாதிரி" என்றார்.

தமிழகத்தில் இலக்கியத் திறனாய்வு மேனாடுகளைப்போன்று பரவவில்லை என்பது உண்மையாகும். ஆனால் திறனாய்வுக்கு ஏற்ற சில சிந்தனைத் துணுக்குகளை நாம் காணமுடியும். நூலின் பயனைக் கூறவந்த நன்னூலார்,

"அறம் பொருளின்பம் வீடடைதல் நூற்பயனே"

என்றார். இதனையே தண்டியாசிரியர் பெருங்காப்பியத்திற்கு இலக்கணம் பேசும்போது "நாற்பொருள் பயக்கும்" என்று கூறிப் போந்தது அறியத்தக்கதாம். இன்பும் பயப்பதோடு மட்டும் நின்றுவிடாமல் அறத்தினைத் தருவதாகவும் அமைதல் வேண்டும் கவிதை என்பது இவர்கள் கொள்கையாம். தமிழ் அறிஞர்கள் திறனாய்வுக் கலையை நன்கு வளரச்செய்யவில்லை. ஆனால் அவ் வடிப்படையில் சில சிறந்த கருத்துக்களை அவ்வப்போது கூறியுள் ளனர். கவிதையைப் பற்றிக் கூறப்போந்த கம்பன் "ஒழுக்கமும் படிந்து" என்று காட்டியுள்ளமை ஈண்டு கவனிக்கற்பாலதாம்.

ஆங்கிலக் கவிதையைப்பற்றிக் குறிப்பிடும்போது வால்டேர் "வேறு எந்த நாட்டாரும் ஆங்கில நாட்டாரைப்போன்று ஒழுக்க உண்மைகளை ஆழமாகவும் அழுத்தமாகவும் கூறவில்லை" என்றும், "என்னைப் பொறுத்த மட்டில் அதில்தான் ஆங்கிலக் கவிஞர்க

---

4. No man was ever yet a great poet without being at the same time a profound philosopher. For poetry is the blossom and fragrancy of all human Knowledge, human thoughts, human passions emotions, language.

ளுடைய மேன்மை யடங்கியுள்ளது"[5] என்றும் குறிப்பிட்டார். எனவே வால்டேர் போன்ற அறிஞர்கள் கவிதைகள் ஒழுக்க உண்மைகளைக் கூறுவதில்தான் அவைகளுடைய சிறப்புக்கள் அடங்கியுள்ளன என்று கருதியுள்ளமை புலனாகும்.

பத்தொன்பதாம் நூற்றாண்டில் வாழ்ந்த சிறந்த திறனாய்வாளர்களில் சிறந்தவர் திரு. மாத்தியூ ஆர்னால்ட். கவிதைகளைப் பற்றி நன்கு ஆராய்ந்தார். அரிஸ்டாட்டிலுக்குப் பின்னர் திறனாய்வுக் கலைக்குச் சிறந்த சட்டங்கள் சிலவற்றைத் தந்தார். "கவிஞர்களின் மேதைத் தன்மை சிறந்த வாழ்க்கைத் தத்துவங்களைக் காட்டுவதில்தான் அடங்கியுள்ளது[6]. மனிதகுலம், இயற்கை மக்கள் வாழ்வு இவைகளைப் பற்றிய கருத்துக்களை நன்கு பெற்று அவைகளைக் கவிதையழகுக்கு உண்மையுள்ளதாகப் பொருத்திக் காட்டுவதில்தான் கவிதையின் மேன்மைத் தன்மை யடங்கியுள்ளது. வாழ்வைப்பற்றிப் பேசாத கவிதைகள் கவிதைகளாகா. வாழ்வுக்கு வேண்டிய ஒழுக்கத்திற்கு மாறாகவுள்ள கவிதைகள் வாழ்வுக்கு எதிராகவுள்ள கவிதைகளாகும்" என்பது அவரது கொள்கையாகும்.

ஆனால் ஒரு சிலர் வாழ்க்கைத் தத்துவங்களைக் கூறுவதே, ஒழுக்க நெறிகளைக் கூறுவதே கவிதையின் தன்மையாக இருத்தல் வேண்டும் என்பர். அதுவே கவிதையின் முதல் முழுநோக்கமாக இருத்தல் வேண்டும் என்பது அவர்கள் கொள்கையாகும். இவர்கள் இந்நிலையில் அதிகம் சென்று விடுகின்றனர். இவைகளைக் கூறுவதில் மேன்மையடங்கியுள்ளது என்பதற்கும் இவைகளையே கவிதை கூறல் வேண்டும் என்பதற்கும் வேற்றுமையுண்டு. இவ்வாறு பேசியவர்கள் திரு. ரஸ்கினைப் போன்றார்.

அவ்வாறு பேசுவது கவிஞனின் வேலையன்று. அது அறநெறியாளரின் (Moralists) கடமையாம்[7]. ரஸ்கினுடைய கருத்தை நாம் ஏற்றுக்கொண்டால் கவிஞர்கட்கும் அறநெறியாளர்கட்கும் வேற்றுமை காணமுடியாது. இருவர் பணியும் வெவ்வேறாகும். அறநெறியாளர்கள் "இதனைச் செய்; அதனைச் செய்யாதே; இத்தகைய செயல்கள் தீமை பயக்கும்" என்று வெளிப்படையாகக் காட்டுவர். ஆனால் கவிஞர்களோ தங்கள்

---

5. No nation has treated in poetry moral ideas with more energy and depth than the English nation; there it seems to be the great merit of the English poets.

6. The noble and profound application of ideas to life is the most essentiai part of poetic genions. Poetry of revolt against moral ideas is a poetry of revolt against life; a poetry of indifference towards moral ideas, is a poetry of indifference towards life. MATHEW ARNOLD.

7. It is the business of the scientist to learn know and prove. It is the business of the rhetorician to persuade, of the moralist to teach 'Life ought to be like that, says the moralist. 'Life looks like that' says the artist. JAMES.

தங்கள் போக்கில் கதை, நாடக, காப்பியப் பாத்திரங்களின் வாயிலாக வாய்ப்புக்கிடைக்கும்போதெல்லாம் அறங்களைக் கூறிச் செல்வார்கள். அவ்வறங்களும் உண்மைகளும் நம்மை யறியாமலேயே நம்முடைய உள்ளங்களில் பதிந்துவிடுகின்றன. இவ்வாறு நடத்தல் வேண்டும் என்று நம்மைக் கட்டாயப்படுத்துவது கவிஞர்களிடம் காணமுடியாத செயல். இங்கிலையில் அறநெறியாளர்களின் பணியையும் கவிஞர்களின் தன்மையையும் நாம் நன்றாக உணர்ந்துகொள்ள வேண்டும்.

தமிழ் நாட்டில் பல அறநெறி நூற்கள் உள்ளன. பதினெண் கீழ்க்கணக்கு நூற்களில் பதினொன்று இவ்வகையைச் சார்ந்தனவாகும். வெற்றிவேற்கை, கொன்றைவேந்தன், நீதிநெறிவிளக்கம், மூதுரை போன்றவைகளைப் பிற்கால நீதிநூற்களாகக் காட்டலாம்.

இவற்றுள் ஓரிரு நூற்களைத் தவிர பிறநூற்கள் நம் உள்ளங்களைத் தொடுவதில்லை. அவைகள் அறத்தைக் கூறுவதாலன்று, நம் உள்ளங்களைத் தொடாமல் போயது. அவைகளில் கவித்துவம் இல்லாமையாகும். ரஸ்கின் கூறுவதை ஒத்துக்கொண்டால் இவைகள் அனைத்தும் நம் உள்ளங்களில் உலவியிருத்தல் வேண்டும்.

திருக்குறள் ஒப்பற்ற நீதிநூல். இதனால்தான் இதனை உத்தரவேதம், பொதுமறை என்றெல்லாம் போற்றிப் புகழுகின்றனர். நீதியைக் கூறும் அறநெறியாளராக மட்டுமன்றி சிறந்த கவிஞராகவும் இருக்கின்ற காரணத்தால்தான் மக்களின் உள்ளங்களிலெல்லாம் நீங்காத இடம் பெற்றுள்ளனர். சிறந்த உவமைகளின் வாயிலாகவும் வாழ்க்கையில் காணுகின்ற சில செய்திகளின் மூலமாகவும் கற்பனையின் துணைகொண்டு காட்டிச் செல்லுகின்ற காரணத்தால் இவர் சிறந்த கவிஞராகக் காட்சி தருகின்றார். ஆயினும் குறள் சிறந்த நீதிநூலாகவே மதிக்கப் படுகின்றது [8].

எனவே இதுகாறும் கூறியவற்றால் கவிதைகள் மக்களின் உள்ளங்களில் நீங்காது உறைய வேண்டுமாயின் இரண்டு பண்புகள் வேண்டும் என்பதும், முதற்பண்பு கவித்துவம் என்பதும்; இரண்டாவது பண்பு மக்களை மக்களாக வாழச்செய்யும் வகையினை உடைத்தாய் அது இருத்தல் வேண்டும் என்பதும் நன்கு புலனாகும். அறநெறியாளர்கள் வேறு. கவிஞர்கள் வேறு. அறநெறியாளர்கள் ஒரு உண்மையைச் சொல்லுவதற்கும் கவிஞர்கள் கூறுதற்கும் வேற்றுமையுண்டு. இங்கிலையை அடுத்த இதழில் காண்பாம்.

8. Thiruvalluvar is more a moralist than a poet.

கரந்தைத் தமிழ்ச் சங்கம், தஞ்சை.

(1860-ஆம் ஆண்டு XXI சட்டப்படி பதிவு செய்யப்பெற்றது)

தமிழ் மொழியின் தனிமை, தொன்மை, எளிமை ஆய சிறப்புக்களை இந்நாடும் பிறநாடும் அறிந்து போற்றவும், தமிழ் நாடும் தமிழரும் சிறப்பாகத் தமக்குரிய பண்பாடு நாகரிகம் முதலிய பல்வகைத் துறைகளிற் பாரினிற் சிறக்கவும், பொதுவாக ஒல்லும் வகையில் உலகநலம் பேணவும், தமிழ்த்தாயின் தண்ணருளால் 1911 மே 14ஆம் நாள் நம் கரந்தைத் தமிழ்ச் சங்கம் நிறுவப்பெற்றது.

நம் சங்கம் தமிழ் நலம் பேணும் தகுதிவாய்ந்த மொழித்துறை அறிஞர்களை அழைத்துச் சொற்பொழிவாற்றச் செய்தும், கட்டுரை வரையச்செய்தும், "தமிழ்ப் பொழில்" என்னும் திங்கள் வெளியீட்டைத் தோற்றுவித்து அதனைப் பேணிப் புரந்தும் வருகின்றது.

தமிழ்நாட்டுத் திக்கற்ற பிள்ளைகள் சிலருக்கு ஒல்லுமளவிற்கு உண்டியும் உறையுளும் வழங்கிச் சிற்றுயிர்க் குற்ற துணையாம் கல்வியையும், உயிரினும் சிறந்ததாய ஒழுக்கத்தையும் அடையத் **திக்கற்ற மாணவரில்லம்** நிறுவித் தொண்டாற்றி வருகின்றது.

மேலும், 1916-ஆம் ஆண்டில், சங்கம் நிறுவிய துங்கன் திரு. வே. இராதாகிருட்டினப்பிள்ளையவர்கள் பேரால் ஒரு **தொடக்கப்பள்ளியையும்**, 1938-ஆம் ஆண்டு சங்க வெள்ளிவிழா நாளில் **கரந்தைப் புலவர் கல்லூரியையும்**, 1944-ஆம் ஆண்டில், தமிழைத் தம் உயிராகக்கொண்டு தமிழ் நலம் பேணிய தமிழவேள் திரு. த. வே. உமாமகேசுவரம் பிள்ளையவர்கள் பேரால் **உயர்நிலைப் பள்ளியையும்** நிறுவித் தொண்டுசெய்து வருகின்றது.

பத்தாயிரக்கணக்கான தமிழ், ஆங்கில, பிறமொழி நூல்களைக்கொண்ட **நூல் நிலயத்துடன்** ஒரு **படிப்பகமும்** நடத்தி வருகிறது.

சங்கம் மேற்கொண்ட இப்பணிகள் பல்லாற்றானும் சிறக்க அன்பர்கள் உதவிசெய்ய வேண்டுகிறோம்.

தமிழ்ப் பொழில்.

இத் திங்களிதழினை எல்லாப் பொது நூலகங்களும் பயன்படுத்தலாமென சென்னைப் பொது நூலக இயக்குநரின் 8—1—57-ம் நாளைய R. C. 232 J 1/56 எண் உத்தரவில் மாவட்ட நூலக அதிகாரக் குழுவினர்க்கும், அவர்கள் வழி நகராட்சி, மாவட்டக் கழகங்களுக்கும் அறிவிக்கப்பட்டிருக்கிறது. (Proceedings R. O. C. No. 232 J 1/56 dated 8—1—57 of the Director of Public Libraries, Madras.)

நூலகங்கள் நடத்திவரும் திருக்கோயில்களின் மேலதிகாரிகள், அவைகளின் நிதி நிலைமை இடந்தருமாயின், "தமிழ்ப் பொழில்" இதழ்க்கு உறுப்பினராகலாமென, சென்னை இந்து சமய, அறநிலைய மாநில ஆணையர், 7—11—56ம் நாளைய L. Dis. 29226/56 எண் உத்தரவில் அறிவிக்கப்பட்டிருக்கிறது. L. Dis. 29226/56 dated 7—11—56 of the Commissioner for Hindu Religious and Charitable Endowments (Administration) Department, Madras.

Regd. No. M. 4192.

விற்பனைக்குக் கிடைக்கும் நூல்கள்.

யாழ் நூல்—(விபுலானந்த அடிகள்) தடித்த தாள் ரூ. ...	18—00
தொல்-சொல்—தெய்வச்சிலையார் உரை ...	2—50
நெல்லை வருக்கக் கோவை ...	0—12
சித்தரந்தாதி ...	0—12
சுருதி வீணை ...	0—25
தமிழரசி குறவஞ்சி ...	0—62
பரத சாத்திரம் ...	1—00
கவியரசு நினைவு மலர் ...	1—00
சிவமும் செந்தமிழும் ...	0—25
சிலப்பதிகாரம் — புகார்க் காண்டம் ...	0—50
Garland of Tamil Poetry ...	2—00
கச்சிக் கலம்பகம்—(பூண்டி அரங்கநாத முதலியார்) ...	0—50
அப்பர் புகழ்மாலை ...	0—25
சுந்தரர் புகழ்மாலை ...	0—25
பாரதசார வெண்பா ...	1—00
தொல்-பொதுப்பாயிரம் உரை ...	0—12
யவன மஞ்சரி (த. இராமநாத பிள்ளை B. A., யாழ்ப்பாணம்)	1—50
இந்தியத் தலயாத்திரை (T. B. தாஸ் ராவ் B. A.,) ...	1—25
புலவராற்றுப்படை (அமிர்தம் சுந்தரநாத பிள்ளை) ...	0—25
கட்டுரைப் பொழில் (அ. மு. சரவண முதலியார்) ...	2—50
தமிழ்ப் பொழில் துணர்கள் 1, 4, 5, 6, 8, 29, 31, 32, 34, துணர் ஒன்றுக்கு (12 மலர்கள்) ...	4—00

'கரந்தைக் கட்டுரைக் கோவை'

கரந்தைத் தமிழ்ச் சங்க வெளியீடு.

சென்னைப் பல்கலைக் கழக (Pre-University) முன்னிலைப் பல்கலைக் கழகத் தேர்விற்குப் பாடமாக வைக்கப்பெற்றுள்ளது.

விலைக்குக் கிடைக்கும். விலை 1—75.

தமிழ்ப் பொழிலின் கையொப்பம்.

		உள்நாடு	மலேயா, இலங்கை முதலிய வெளிநாடுகள்.
முன்பணம் ஆயுள் வரி	ரூ.	50 00	50 00
,, ஆண்டு வரி சங்க உறுப்பினர்க்கும் தலைமையாசிரியர் ஒப்பம்பெற்ற தனிப்பட்ட மாணவர்க்கும்		2 00	2 50
,, ,, ஏனையோருக்கு		3 00	3 50

Edited and Published by S. Swayamprakasam, B. A., B. L., Karanthai Tamil Sangam, Tanjore. Printed by N. Chinniah for T.V.M. Mahalingam at Mahalingam Power Press, 1321, South Rampart, Tanjore.